விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆடி 12 ஷவ்வால் 6 இதழ் 165
யாழ்ப்பாணம் புதன்கிழமை 28—7—82

## தர்மபுரம் பாழடைந்த கிணற்றினுள்
# ரூபா 2 லட்சம் அம்மன் சிலை!

(கிளிநொச்சி)
தர்மபுரத்தில் பாழடைந்த ...ணறு ஒன்றிலிருந்து சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான ...மன் விக்கிரகம் ஒன்று ...ளிநொச்சி பொலிசாரால் ...ண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஐம்பொன்னுலான இந்த அழ...ன விக்கிரகம் காவத்தையில ...ள இந்து ஆலயத்திலிருந்து திருட்டுப்போனதாக இருக்கலாம் எனபொலிசார் கருதுகின்றனர்.

இவ்விக்கிரகத்தின் நெற்றியிலிருந்த பெறுமதிமிக்க இரத்தினக்கல் அகற்றப்பட்டிருக்கிறது. இந்த இரத்தினக்கல் 40 ஆயிரம் ரூபா பெறுமதியானதாக இருக்கலாம் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

இரத்தினக்கல் களவாடப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் திரு. கே. ஜே. பிரேமதாசா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியே இவ் விக்கிரகத்தைக் கைப்பற்றியுள்ளது கிளிநொச்சிபொலிஸ் நிலையத்தில் விக்கிரகம் வைக்கப்பட்டுள்ளது. (இ)

## சீனுவில் பிரதியமைச்சர் பதவி நீக்கம்

பீக்கிங், ஜூலை. 27
சீனுவில் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் பிரதியமைச்சரொருவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது, [வெ]

## ஜனுதிபதியிடம் கோரிக்கை:
# தமிழ்பேசும் மக்களுக்கு
# சுயநிர்ணய உரிமைவேண்டும்!

## கண்டியில் நடந்த 40 தொழிற்சங்கங்களின் மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானம்

(கண்டி)
தமிழ் பேசும் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு மதிப்புக் கொடுக்கும் விதத்தில் சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுயநிர்ணய உரிமையை உடன்வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஜனுதிபதியைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் கண்டியில் நடந்த அரசாங்க பொதுச்சேவை தொழிற்சங்க சம்மேளன10வது வருடாந்த மகாநாட்டில் நிறைவேறியது.

கண்டி பௌத்த இளைஞர் கழக மண்டபத்தில் நடந்த மகாநாட்டில் 40க்கு மேற்பட்ட தொழிற் சங்கங்களின் 700 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 50க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டிற்கு சோவியத் நாட்டின் தொழிற் சங்க மையத்தின் பிரதான செயற்குழு அங்கத்தவர்களும், ஆசிரியர் சங்கபிரதிநிதிகளும் வாழ்த்துக்கள் அனுப்பியிருந்தனர்.

உத்தியோகத்தர்கள் தெரிவின் போது மீண்டும் திரு. ஜாக் பெரேரா தலைவராகவும், திரு எச். பியதாசா செயலாளராகவும், உப தலைவர்களில் ஒருவராக வடமாகாண சம்மேளன இணைச் செயலாளர் திரு க. நவரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர்.

இம்மாநாட்டில்கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

பல்லாண்டு காலமாக கனிஷ்ட ஊழியர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் உத்தியோக மொழி தமைமை சட்டத்தால் சம்பள உயர்வுசேவை உறுதிப்பாடுபதவி உயர்வுகள் மறுக்கப்பட்டுள்ளதை அரசின் கவனத்துக்குக் கொண்டு வருவதெனவும், அச் சட்டத்தை திருத்தியமைத்து பாகுபாடு காட்டாது சகலருக்கும் நீதி வழங்குமாறு மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தொழிற்சங்க உரிமைகளையும் 1980ல் பொது வேலை நிறுத்தம் செய்த ஊழியர்கள் அனைவரையும் சம்பளப் பாக்கியும் கொடுத்து உடனடியாக வேலைக்கு அமர்த்த வேண்டும் என இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது. அத்துடன் தொழிலாளர் போராடிப் பெற்ற ஜனநாயக உரிமைகளை மீண்டும் வழங்க வேண்டும்.
(க)

## சேபாலாவின் பிணை இடைநிறுத்தம்

(கொழும்பு)
இத்தாலிய விமானத்தைக் கடத்திய சேபால எக்கநாயக்காவை பிணையில் விடும் விவகாரம் தொடர்பான தீர்ப்பு அடுத்தமாதம் 10ம் திகதி வழங்கப்படுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இவ்விவகாரம் தொடர்பான வாதம் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

சேபால எக்கநாயக்காவிற்கு பிணைவழங்கும்படி கொழும்பு நீதவான் அளித்த தீர்ப்பை அடுத்தமாதம் 10ம் திகதிவரை இடை நிறுத்திவைப்பதென்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது, (வெ)

## இந்திய பொருட்கள் அபகரிப்பு
# கொழும்பு சென்ற 'மினிபஸ்'ஸில் துப்பாக்கிமுனையில் கொள்ளை!

(மன்னுர்)
தலைமன்னுர் துறைமுகத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற மினிபஸ் ஒன்று துப்பாக்கிமுனையில் வழிமறிக்கப்பட்டு சுமார் 28,150 ரூபா பெறுமதியான இந்தியப் பொருட் களும், பணமும் கொள்ளையடிக்கப் பட்டது.

இத்சம்பவம் அதிகாலை 2 மணியளவில் முருங்கன் இசமாலை தாழ்வு என்னுமிடத்தில் இடம்பெற்றது

துப்பாக்கியைக் காட்டி மினி பஸ்ஸை வழிமறித்த 6பேர் சாரதியிடம் இருந்து 150 ரூபா பணத்தையும் இந்தியாவிலிருந்து வந்த பிரயாணிகளுடம் இருந்த சுமார் 28 ஆயிரம்ரூபா பெறுமதி யான இந்தியப் பொருட்களையும் கொள்ளையடித்துக் கொண்டு தலைமறைவாகி விட்டனர்.

இச்சம்பவம் பற்றி முருங்கன் பொலிசில் புகார் செய்யப் பட்டுள்ளது. [இ]

# நெஞ்சை உருக்கி, கண்ணீர் மல்கவைத்த கலையரசுவின் இறுதிச் சடங்கு

(ராஜகோபால்)
ஈழத்து தமிழ் நாடகத் தந்தை கலையரசுவின் இறுதிச் டங்கு நெஞ்சை உருக்கி, கண்ணீரை மல்கவைத்துவிட்டது!

'சொர்ணர்' பிறந்த இடமான அவர்து நவாலி இல்லத்தில் நேற்று மாலை அன்னுரது பூதவுடலுக்கு அவருடன்ஒட்டி உறவாடியவர்களும், அவர் வளர்த்துவிட்ட கலைஞர்களும், அரசியல்வாதிகளும், எழுத்தாளர்களும், உற்றூரும், உறவினர்றகளும் கண்ணீர் அஞ்சலி செலுத்தி தமது இறுதி மரியாதையை செலுத்தினுர்கள்.

வசதியான குடும்பத்தில் பிறந்து, நாடகம் நடித்தால் 'கூத்தாடி' என்று கிண்டல்' செய்யப்பட்டகாலத்தில், துணிந்து நாடகத்துறைக்குள் கால் வைத்து கடந்த எண்பது ஆண்டுகாலமாக ஈழத் தமிழ் நாடகத்துறைக்கு கலையரசர் ஆற்றிய சேவைக்குக் காணிக்கையாக ஈழத்தமிநாடகப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து பேணிப் பாது காக்கும் பேராசிரியர் 'வித்தி' முதல் கலைஞர் கே. எம். வாசகர் வரை கண்ணீர் மல்க தொண்டை கர ரக்க தமது கண்ணீர்அஞ்சலியைச் செலுத்தியது உள்ளத்தைக் ..சிய வைத்துவிட்டது.

''500 நாடகங்களை தயாரித்திருக்கிறுர்கலையரசர், அத்தனையும் நினைவில் நிற்கக்கூடிய அருமையான நாடகங்கள், அவர் அந்த நாடகங்களில் நடித்தும் நம் நெஞ்சங்களைத் தொட்டிருக்கிறுர்'' என்று அஞ்சலி உரையை ஆரம்பித்த 'வித்தி' தமக்கும் கலையரசருக்கும் இடையே இருந்தத்தொடர்பை உருக்கமாகக் கூறினுர்.

''மட்டக்களப்பில் அண்ணுவிமார் நாடகவிழாவில் கலையரசு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட காட்சி இன்றும் என் நினைவில் நிற்கிறது. ஈழத்து நாடகத்துறைக்கு அவர் அளித்த பங்களிப்புக்குத் தரும் கௌரவமாக அதனை எண்ணி அப்போது மகிழ்ந்தேன்'' என்ற வித்தி.

(8-ம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரம் மூதாட்டி ரேசம்மா மர்ம மரணம்:
### சந்தேகநபர் றிமாண்டில்!

(கிளிநொச்சி)
தனிமையில் வாழ்ந்துவந்த உருத்திரபுரம் மூதாட்டி செல்லத்துரை ரேசம்மா மர்ம மரணம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான பாவிலுப்பிள்ளை அமிர்தநாதர் [71 வயது] நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

கிளிநொச்சி நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. ஜெகசோதி முன்னிலையில் இவ் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

# 600 குடும்பங்களின் குடிநீர்ப் பிரச்னைதீரஎம்.பி. நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]
அச்சுபேலி வடக்குத்- தெற்குப் பகுதிகளின் கரையோரங்களில் வசிக்கும் சுமார் 600 குடும்பங்கள் குடி...ரின்றிக் கஷ்டப்படுவதாக தெரிவிக்கப்பட்ட புகார் குறித்து கோப்பாய் எம். பி. நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப்பிரச்னை சம்பந்தமாகக் கிடைத்த முறைப்பாட்டின் பேரில் கோப்பாய் எம்.பி.திரு. மு.ஆலாலசுந்தரம்குறிப்பிட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

அச்சுவேலி கல்வி வட்டத் தலைவர் திரு. க. இராசதுரை, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. ந. இராசேந்திரன், சனசமூக நிலையத் தலைவர் திரு. சண். ஜெயேந்திரபோஸ் ஆகியோர் எடுத்துக் கொண்ட முயற்சியின்பேரில, கோப்பாய் எம்.பி.திரு.ஆலாலசுந்தரம் விரைவில் குடிநீர்ப் பிரச்னைதீர நடவடிக்கைஎடுப்ப

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பதிவு செய்யப்படாத புனரமைக்கப்பெற்ற Isuzu–ELF150 15 சீற் கைறூவ் 1979 மொடல் வானும் C/90 ஹொண்டா மோட்டார் சைக்கிள் களும் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
3930

பல்லவராயன்சட்டுஅரியாலை நாகபடுவான் குளத்தில் முதலாம் வாய்க்கால் மூலம் தண்ணீர் பாயும் சிறுபோகம் காலபோகம் இரண்டும் செய்கை பண்ணப்படும் சொந்த உறுதியுடைய ஐந்து ஏக்கர் நெல் வயல் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. கா. கிருஷ்ணபிள்ளை 9, அரசடி ஒழுங்கை நெடுங்குளம் றோட், அரியாலை யாழ்ப்பாணம்.
4006

மனுதாரின் சட்டத்தரணி
த. சோமசுந்தரம்
93/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

யாழ்ப்பாணம் மூர்வீதி, முகிதீன் பள்ளிவாசல் றோட்டு, 20ம் இலக்கத்தைச் சேர்ந்த மரணசாதனமின்றி மரணமெய்த்திய முகம்மது அபூபக்கர் சமூன் என்பவரது மரணச்சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்
மீராலெப்பை மரிக்கார் அபூபக்கர், 20, முகிதீன் பளளிவாசல் றோட்டு, மூர்வீதி, யாழ்ப்பாணம்.
மனுதார்

மரணச்சொத்து
)இல. 3632
நியாயாதிக்கம்)

எதிர்

மீராலெப்பை மரிக்கார் அபூபக்கர் பெண் சுபைத்தா இல. 20, முகிதீன் பள்ளிவாசல் றோட்டு, மூர்வீதி, யாழ்ப்பாணம்.

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு மாசிமாதம் 19 ஆம் நாளன்று முற்பகல் 8–30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
தா. குலஞானம்
பதிவாளர்

1982ஆம் ஆண்டு 2ம் மாதம் 5 ஆம் நாள் என்னால் வரையப்பட்டது.

மனுதாரின் பதிவு பெற்ற சட்டத்தரணி.

14–5–82 காரணம் காட்டும் திகதி 6–8–82க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தா. குலஞானம்,
பதிவாளர்
4009

## விற்பனைக்கு

Sharp கார் ஸ்ரீரியோ கசெற் – றேடியோ புத்தம் புதியது விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி. ஸ்ரீகாந்தா C/o திருமதி. சிவசம்பு பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில் [பொற்பதி பிள்ளையார் கோவில் முன்பாக.]
4001

## பயிற்சி

றேடியோ–டெலிவிசன், ஏயர்சொண்டிசனிங், வெல்டிங், Hotel Management, மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பம் 30–07–82. அனைவரும் சேரலாம். நேரில் வரவும். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
3970

## தவறிவிட்டது

தோப்பு அச்சுவேலியைச் சேர்ந்த நன்னித்தம்பி தயாசிலன் ஆகிய எனது IC 593440990 V இலக்கம் கொண்ட ஆள் அடையாள அட்டை யாழ். பஸ்ஸ்ரான்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தவவு செய்து உடன் அடையாள அட்டையிலுள்ள முகவரியில் அல்லது பூபாலசிங்கம் புத்தகசாலையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
[3999]

## தேவை

நெசவு தறிகள் இயக்குவதற்கு உகந்த வீடு அல்லது மண்டபம் யாழ் குடாநாடு பகுதியில் பிரதான வீதியில் மின்சாரம், தண்ணீர் வசதிகளுடன் வாடகைக்கு தேவை. உடன் விண்ணப்பிக்கவும். A. G. Alfred. 60 Peterson Lane. Colombo – 6.
4007

கோப்பாய், இருபாலைப் பகுதியில் இரண்டு பரப்பு வீடு கட்டக்கூடிய காணி தேவை விலை விபரங்களுடன் தொடர்பு கொள்க. திருமதி ஸ்ரீகாந்தா, C/o திருமதி சிவசம்பு, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். பொற்பதி பிள்ளையார் கோவில் முன்பாக]
[4000]

## ரூபா. 50,000 மேலதிக வருமானம்

[கரவெட்டி]

அண்மையில் வவுனியாவில் நடந்த மாவீரன் பண்டார வன்னியனின் சிலை திறப்பு விழாவின் போது நடாத்தப்பட்ட விசேட பஸ் சேவையினால் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபைக்கு 50 ஆயிரம் ரூபா மேலதிக வருமானமாகக் கிடைத்திருக்கிறது.

இந்த விசேட பஸ் சேவையின் போது 20 பஸ்கள் சேவையில் ஈடு படுத்தப்பட்டிருந்தன

பிரஸ்தாப பஸ் சேவையை ஒழுங்கு செய்வதற்காக வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு மு. சிற்றம்பலம் ஆகியோர் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு நன்றியும், பாராட்டும் தெரிவித்துள்ளார்கள்.

[க]

## வடபகுதிக்கு 34 புதிய பஸ்வண்டிகள்

[கரவெட்டி]

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்கு இதுவரை 34 புதிய பஸ் வண்டிகள் வந்து சேர்ந்துள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவற்றை விட இன்னும் 24 புதிய பஸ் வண்டிகள் வந்து சேரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[க]

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வட்டுக்கோட்டை கிழக்கு பொன்னம்பலம் குலவீரசிங்கம் என்பவரின் மரணசாதனமெழுதப்பட்ட சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்
வழ. இல. தத்துவம்/3604
பொன்னம்பலம் குலவீரசிங்கம் கைம்பெண் தங்கத்திரவியம் வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை
மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கானது மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்து நிர்வாகத் தத்துவப் பத்திரம் பெறுவதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளதெனவும் 1982ம் ஆண்டு மாசி மாதம் 26ந் திகதி அதில் அதற்கிணங்க முதலிலேயேஆக்கப்படும்முற்றுனகட்டளை பதியப்பட்டுள்ளதெனவும்இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1982ம் ஆண்டு வைகாசி மாதம் 21ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
தா. குலஞானம்
பதிவாளர்

வரைவு:
க. குணரத்தினம்
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி,
4008

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வீதி வேலைப் பொருட்களுக்கான கூறுவிலை அறிவித்தல் 1982

யாழ். மாநகராட்சி மன்றத்திற்கு ''வீதிவேலைப் பொருட்களான 4'' — 6'', 6'' — 9'' கண்டகல் கிறசர் தூள் [சிறிற்] முதலியன விநியோகிப்பதற்கான கூறுவிலைகள் விநியோகஸ்தரிடம் இருந்து கோரப்படுகின்றது.

கூறுவிலைகள் யாழ். மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 02–08–82–ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3–00 மணி வரை ரூபா 10/– செலுத்தி பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப்பிரதிகளில் 3–08–82 நண்பகல் 12–00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கூறுவிலை அனுப்பும் கடித உறை அரக்குமுத்திரையிடப்பட்டு மராமத்துப்பகுதி வீதி வேலைப் பொருட்களுக்கான கூறுவிலை — 1982 எனக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்கட்கு யாழ். மாநகர மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்.
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
26–07–82.
[4005

## பருத்தித்துறை நவீனசந்தை:

# அமைப்புத் திட்டத்தினால் சிக்கல்கள் உருவாகும்

[புலோலி]

பருத்தித்துறை புதிய சந்தையமைப்புத் திட்டத்தினால் வாகனப்போக்குவரத்து, மக்கள் புழக்கம் மேலும் இடநெருக்கடியால் சீர்குலைந்து சிக்கல்களை உருவாக்கும். இருக்கின்ற மரக்கறிச்சதையைவிட, புதிய சிறிய மரக்கறிச் சந்தையும், இருக்கின்ற மீன்சந்தைக்குப் பதிலாக புதிய சிறிய மீன் சந்தையும் அமைக்கும் வியப்பான விந்தையான திட்டமாக இருக்கிறது. எனவே இத்திட்டத்தை கைவிடவேண்டும் அல்லது பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்புக்குவிடவேண்டும்.

இவ்வாறு, பருத்தித்துறை நகரசபையால் அமைக்கப்படவுள்ள புதிய சந்தைத் திட்டம் சம்பந்தமாக நகரசபைச் சுயேட்சைக் குழுத் தலைவர் திரு. மு. பொ. வீரவாகு, உறுப்பினர் திரு. சிவா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

25–6–82பருத்தித்துறை நகரசபையின்கூட்டம் நடைபெற்ற போது புதிய மரக்கறிச்சந்தை அமைப்பது பற்றிய பிரேரணை மீது உரையாற்றிய தலைவர் இன்றைய மீன்சந்தை அமைந்துள்ள காணியில் கடைகள் நீங்கலாக 4300 சதுர அடிகள் கொண்டவெற்று மண்டபமாக அமையும் என்று கூறினார். இதற்கான உத்தேச செலவின மதிப்பீடு 7, 90, 327 ரூபா வாகும். இந்தத் தொகை மக்கள் வரிப்பணம் என்பதைமறந்துவிடக்கூடாது. தற்பொழுதுள்ள மரக்கறிச் சந்தை கடைகள் நீங்கலாக 8000 சதுரஅடிகள் கொண்டது. இதுகூட மக்கள் விலைச்சென்று புழங்க முடியாத இடநெருக்கடியைத் தந்து கொண்டிருக்கிறது. மக்கள் வரிப்பணத்தைச் செலவிடும் போது மக்களுக்கும் நகரத்திற்கும் அத்திட்டம் பயனுள்ளதாக அமையவேண்டும் என்று மேலும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருந்து அனுப்பக் கோரிக்கை

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராம அபிவிருத்தி சபை உப அலுவலக மேற்பார்வையில் நடைபெறும் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு வேண்டிய மருந்து வகைகளை உடன் அனுப்பி வைக்குமாறு கோரும் மகஜரொன்றை இப்பகுதிப் பொது மக்கள் ஆயுள்வேதக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## உடன் விற்பனைக்கு

இயக்கச்சி சந்தியிலிருந்து ½ மைல் தூரத்தில் தென்னந்தோட்டம், வயல்களுடன் கல்வீடும் அடங்கிய காணி விற்பனைக்குண்டு. சந்தியிலிருந்து தோட்டம் வரை நல்ல பாதை உண்டு.

விபரங்களுக்கு;
முதலியார் கார்த்திகேசு,
''ரூபி விலா'', வல்வெட்டித்துறை.
தொலைபேசி: 6
(4004)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1-ம் பரிசு — TV இல. 2415
2-ம் பரிசு — சைக்கிள் இல. 2158
3-ம் பரிசு — ரேடியோ இல. 76

ஆறுதல் பரிசுகள்.
1. இல. 1195, 2. இல. 706, 3. இல. 805, 4. இல. 1293, 5. இல. 2163

இங்ஙனம்
க. றமேஸ்குமார்,
செயலாளர்.
[4003]

## ரஸ்ற் ரவல் சேவிஸ் (Trust Travel Service)

AEROFLOT விமானத்திற்கான டிக்கட்டுகளை குறைந்த செலவில் உடனுக்குடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கொழும்பு | பிராக் | ரூ. 8700-00 |
| கொழும்பு | லண்டன் | ரூ. 7700-00 |
| கொழும்பு | கராச்சி | ரூ. 2750-00 |
| கொழும்பு | சிங்கப்பூர் | ரூ. 6500-00 |

(இருவழி ரிக்கட்)

★ PASSENGER SALES AGENT FOR AEROFLOT ★

சகல ரவல் ஏஜன்சிகளும் Aeroflot விமானத்திற்கான டிக்கட்டுகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விசேட கமிஷன் வழங்கப்படும்.

★ வீசா (VISA) கள் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்படும்.

## ரஸ்ற் ரவல் சேவிஸ்

தலைமையகம்:
HIRDRAMANI ARCADE
65, Chatham Street.
Colombo 1.
தொலைபேசி: 548409
அன்ட் 548811

கிளை:
11 A, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8111
(3988)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த அபின் நாகபட்டணத்தில் சிக்கியது!

## ஜீப் வண்டியுடன் மூவர்கைது!!

சென்னை, ஜூலை 27
இலங்கைக்கு கடத்திச் செல்லப்படவிருந்ததாகக் கூறப்படும் ஒருலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான அபின் கைப்பற்றப்பட்டுள்ளது.

நாகபட்டணத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் இத்த அபினைக் கைப்பற்றினார்கள்.

இச் சம்பவம் தொடர்பாக, ஜீப்வண்டி ஒன்றும் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக 3 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் சுங்க அதிகாரிகள் தொடர்ந்து விசாரணைசெய்து செய்துவருகின்றனர். [க]

## முன்னாள் இராணுவ ரோந்து சேவை விஸ்தரிப்பு

சென்னை ஜூலை. 27
முன்னாள் இராணுவத்தினர் இரவு நேரங்களில், நகரப்பகுதிகளில் ரோந்து சுற்றும் நடவடிக்கை, கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்படும். (க)

## வீரமணி தாக்குதல் மூவர் கைது

சென்னை ஜூலை .27
திராவிடர் கழகத் தலைவர் திரு, வீரமணி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக 3 பேர் ராஜபாளையத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

பொதுக் கூட்டமொன்றிலிருந்து திரும்பிவரும் வழியில் இனம்தெரியாத நபர்களால் திரு. வீரமணி தாக்கப்பட்டு முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டது தெரிந்ததே. [க]

## பெற்றோரின் கவலையீனத்தால் குழந்தை பலி!

[கிளிநொச்சி]
ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று கிருமிநாசினிப் போத்தல் மூடியை முகர்ந்து பார்த்ததால் பரிதாபமாக மரணமானது.

நெஞ்சை உருக்கும் இச்சம்பவம் பரந்தனில் நடைபெற்றது.

தம்பிராசா கௌசல்யா என்னும் இக் குழந்தை வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போது, கிருமிநாசினி வாடை வீசவே சந்தேகம் கொண்ட தாய் சென்று பார்க்கும்போது குழந்தை கிருமிநாசினிப்போத்தல் மூடி ஒன்றை முகர்ந்து கொண்டிருப்பதைக் கண்டு தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்கு பின் மரணமாகியது.

வீட்டில் பாதுகாப்பற்ற நிலையில் கிருமிநாசினிப் போத்தல் மூடி திறக்கக்கூடிய நிலையில் இருந்ததாகவும் இம் மூடியையே குழந்தை முகர்ந்ததாகவும் இம்மரணம் சம்பந்தமான விசாரணையில் தெரியவந்தது.

இம் மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் நடத்தினார்.

சாட்சிகளைக் கிளிநொச்சிப் பொலிசைச் சேர்ந்த திரு. எம். கணேசதுரை ஆஜர் செய்தார்.

[6ம் பக்கம் பார்க்க]

## இஸ்ரேலை பாலஸ்தீனதலைவர் அங்கீகரித்துவிட்டாரா?

### ஐ. நா. தீர்மானங்களில் அரபாத் கையெழுத்திட்டதை அடுத்துஎழுந்துள்ள கேள்வி

பெய்ரூட், ஜூலை 27
பாலஸ்தீனியப் பிரச்னை தொடர்பான சர்ச்சைக்குரிய ஐ. நா. தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளும் தஸ்தாவேஜு ஒன்றில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யாஸீர் அரபாத் கைச்சாத்திட்டது பெரும் பிரச்னையைத் தோற்றுவித்துவிட்டது.

குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் ஜனாப் அரபாத் கையெழுத்திட்டதையடுத்து பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலை அங்கீகரித்துவிட்டதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதே வேளை பாலஸ்தீனவிடுதலை இயக்கம் இஸ்ரேலை அங்கீகரிக்கும் வரை பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிக்கவோ, பேச்சுவார்த்தை நடத்தவோ அமெரிக்கா முன்வராது என அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதே சமயம் அமெரிக்க சமாதானப் பிரதிநிதி திரு. பிலிப் றபீப் ஜோர்டான் மன்னருடன், மத்திய கிழக்கு விவகாரம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (க—இ)

# பெய்ரூட்மீது இஸ்ரேலிய விமானங்கள் குண்டுவீச்சு

## 5-வது நாளாக நடந்த தாக்குதலில் 54 பேர் பலி!

லண்டன் ஜூலை. 27
இஸ்ரேல்ஐந்தாவது நாளாக மேற்கு பெய்ரூட்டில் தொடர்ந்து குண்டுகளை வீசியதால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. 54 பேர் பலியானார்கள்.

இத் தாக்குதலின் போது பாலஸ்தீனிய விடுதலை இயக்க தளங்கள் மீதும் பாலஸ்தீனிய அகதிகள் முகாம்கள் மீதும் அணியணியாக வந்த இஸ்ரேல் விமானங்கள் சுமார்45நிமிடங்கள் மாறிமாறி குண்டு வீசியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

## பிரிட்டனின்

## பொருளாதாரமேம்பாட்டிற்கு வேலைஇல்லாத்திண்டாட்டம் அவசியம்

லண்டன் ஜூலை 27
பிரிட்டனின் பொருளாதார மேம்பாட்டுக்கு வேலை இல்லாத் திண்டாட்டம் நாட்டில் நிலவவேண்டியது அவசியம்.

இவ்வாறு பிரிட்டனின் சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் வேலை இல்லாத் திண்டாட்டம் இல்லாவிடின் பணவீக்கம் ஏற்பட்டு பெரும் பொருளாதாரச் சிக்கலை அரசு எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் அச் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதாக எதிர்க்கட்சிகள் அண்மைக்காலமாக குற்றம் சாட்டிவருவது தெரிந்ததே.

## மறியல் ஒத்திவைப்பு

சென்னை ஜூலை. 27
சாதிப்பாகுபாட்டை ஆட்சேபித்து திராவிட கழகத்தினர் தமிழ் நாடு ஆலயங்கள் முன் நடந்தவிருந்த மறியல் போராட்டம் பின் போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது [ ]

## இன்று

[யாழ்ப்பாணம்]
அராலிதெற்கு கரைப்பிட்டி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் பெரியபுராண தொடர் உரையில் இன்று புதன்கிழமை "சுந்தர மூர்த்தி நாயனார்" என்னும் பொருள்பற்றி திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் உரையாற்றுவார்.

## பருத்தித்துறையில்

## ரூ. $1\frac{1}{2}$ லட்சம் செலவில் திறந்தவெளிஅரங்கு

[புலோலி]
பருத்தித்துறைக் கடற்கரையில் சுமார் 1,50,000 ரூபா செலவில் பருத்திச் துறை நகர சபை 'நடராசா திறந்தவெளியரங்கை' நிர்மாணிக்கவுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் தலைவராக இருந்துவெள்ளி விழாக்கண்ட அமரர் சட்டத்தரணி ந. நடராசாவின் ஞாபகார்த்தமாகவே இத்திறந்த வெளியரங்கிற்கு நடராசா திறந்தவெளியரங்கென பெயரிடப்படவுள்ளது.

பருத்தித்துறை பழைய தபாற் கந்தோருக்கு முன்பாக இத்திறந்தவெளியரங்கை நிர்மாணிக்க பருத்திச் துறை நகர சபை தீர்மானித்துள்ளது.

பருத்திக்குறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின்கீழ் 1979ம் ஆண்டு 30,000 ரூபாவையும், 1982ம் ஆண்டு ‹0,0′0 ரூபாவையும் இத்திறந்தவெளியரங்கை நிர்மாணிப்பதற்கென ஒதுக்கீடு செய்திருந்தாரெனவும், தற்போதைய மதிப்பீட்டின்படி இத்திறந்தவெளியரங்கை நிர்மாணிக்க சுமார் 1,50,000 ரூபா தேவைப்படுமென்றும், தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 70 000ரூபாவுடன் அடுத்த மாதம் இத் திறந்தவெளி அரங்கை அமைப்பதற்கான ஆரம்பநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும், மீதிக்காசைப் பருத்தித்துறை எம். பி திரு க. துரைரத்தினம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்து வழங்குவரெனவும் பருத்தித்துறை நகரமுதல்வர் சட்டத்தரணி எம். வேலும்மயிலும் தெரிவித்தார்.

## இந்திரா காந்தியின் அமெரிக்க விஜயம்:

# ஜனதிபதி றீகனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்!

## பார்லிமென்ட் இருசபை உறுப்பினர்களை சந்திப்பார்

புதுடில்லி, ஜூலை 27
பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி 9 நாள் நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு இன்று காலை அமெரிக்கா புறப்படுகின்றார்.

இன்றுமாலை நியூயோர்க் போய் சேரவிருக்கும் பிரதமர் இந்திராகாந்தி வழியில் லண்டன் விமானநிலையத்தில் சிறிது நேரம் தங்குவார்.

எதிர்வரும் வியாழக்கிழமை காலை, அமெரிக்க ஜனதிபதி றீகனை சந்திப்பார். அன்று ஜனாதிபதி றீகனுடன் முறையான பேச்சுவார்த்தை நடத்துவார்.

அதிபர் மாளிகையில், இந்திராகாந்திக்கு விரிவான வரவேற்பும இரவு விருந்துபசாரமும் அளிக்கப்படும்.

அமெரிக்க வெளியுறவு மந்திரியை வாஷிங்டனில் சந்திப்பார். வெளியுறவு மந்திரி பகல் விருந்தளிப்பார்.

வாஷிங்டன் பகுதியிலுள்ள நகரசபை, பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு பொது வரவேற்பு அளிக்கும்.

திருமதி இந்திராகாந்தி முக்கிய தலைவர்களைச் சந்திப்பார். அமெரிக்க பார்லிமெண்ட் இருசபையின் உறுப்பினர்களையும் சந்தித்து உரையாற்றுவார்.

பத்திரிகையாளர் கிளப்பில் உரையாற்றுவார் உலக நாடுகளின் பத்திரிகையாளர்கள் பேட்டி காணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாரத சமூக பிரஜைகளையும் சந்தித்து உரையாடுவார். யப்பான் பிரதமரின் அழைப்பை ஏற்று பாரதம் திரும்பும் வழியில் டோக்கியோவிற்கும் சென்று, ஆகஸ்ட் 6ம் தேதி புதுடில்லி வந்து சேருவார்.

## "மாணவர்க்குக் கல்வியுடன் சமூகப்பண்பு அவசியம்"

[புலோலி]
"பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பிவிட்டால் மட்டும் போதும் எனப்பெற்றோர்கருதக்கூடாது பிள்ளைகளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் பெற்றோர் கண்காணிக்கவேண்டும். பெரிய பாடசாலைகளுக்கும் ரியூட்டரிகளுக்கும் பிள்ளைகளை அனுப்புவதன் மூலம் தான் பிள்ளைகளைக் கல்விமான்களாக்கலாம் எனப் பெற்றோர் நினைக்கக்கூடாது" என்று அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய இல்லங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டுஉரையாற்றிய கல்வியதிகாரி திரு. கே. மகேசன் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. வி. தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவைச் சட்டத்தரணி எம். சிவகுருநாதன் கொடியை ஏற்றி ஆரம்பித்துவைத்தார். தொடர்ந்து உரையாற்றிய கல்வியதிகாரி திரு. மகேசன், மாணவர்கள் கல்விமான்களாக வந்துவிட்டால் மட்டும்போதாது. அவர்களிடத்தில் சமூகப்பண்பு நிறைந்திருக்கவேண்டும்" என்றார்.

பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு பி. சச்சிதானந்தம் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றினார். பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் எம். சிவபாதம் நன்றியுரை கூறினார். [அ]

### மணிவாக்கு

ஒருவன் உலகத்தையெல்லாம் உரிமையாகப் பெற்றாலும், தன் உயிரை இழப்பானேல், அவன் அடையக்கூடிய நன்மையாது? —பைபிள்

# நமது நோக்கு

## 'உலகமே ஒரு நாடகமேடை'

இலங்கை நாட்டிலே யாழ்ப்பாணம், தமிழர் வாழும் தொன்னகரம்; தமிழ்மனங்கமழும் திருநகரம்.

பண்ணோடு இசைபாட வல்ல பாணர் என்றொரு வகுப்பார் யாழிலே திறமை பெற்றிருந்தமையால் யாழ்ப்பாணர் என்றழைக்சப்பட்டனர் என்பது வரலாறு.

யாழ்ப்பாணம் இன்று என்ன நிலையில் இருந்தபோதும் இந்தப் பழமையைப் பெற்றிருப்பதை காலத்துக்குக் காலம் நினைவூட்டுஞ் சம்பவங்கள் நிகழ்வது கண்கூடு.

'உலகமே ஒரு நாடகமேடை. ஆண்களும், பெண்களும் அதன் கட போதரும் வெறும் நடிகரேயாவர்; அவர்கள் பிறப்பு என்னும் நுழைவாயிலையும், இறப்பு என்னும் வெளிவாயிலையும் பெற்றுள்ளனர். என்ற உலக மகாநாடகக் கவிஞர் ஷேக்ஸ்பியரின் கூற்றுக்கு அமைய இந்நாட்டின் தமிழ் நாடக மேடையின் உயிருக்குயிரான கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் வெளிவாயிலால் மறைந்துவிட்டார்.

ஐந்து வருடம் தாமதித்திருந்தால் அவருடைய நூற்றாண்டு நிறைவுவிழாவைக் கண்டு, இந்த நாடக முடிவில் இன்னொரு சாதனையை ஆற்றியிருப்பார் கலைஞன், கம்பனி நிர்வாகி, கிரிக்கட் வீரன், அன்புடைய குடும்பத் தலைவன், பண்புடைய நண்பன் எனனும் பல திறப்பட்ட பெருமைமிகுந்தவர் கலையரசர்.

சில வருடங்களாக ஓய்வு பெற்றிருந்த நாடகக் கலைஞர் தாம் நடித்த நாடகங்களை நினைவுறும்போது, ஷேக்ஸ்பியரின் வேறு பல கூற்றுகளை உணர்ந்து சுவைத்திருப்பாரென்று நம்ப இடமுண்டு.

நகைச்சுவைப் பாத்திரமாக, கதாநாயகனுக, 'வில்லனுக' இன்னும் பலவகைகளிலும் நடித்து மக்கள் உள்ளங்களை உருகவைத்த கலையரசர் வாழ்வின் சோக பகுதிகளை, ஆங்கிலக்கவிஞன் நன்ருக வரைந்த சொல்லோவியங்களுக்கு, உயிர்த்துடிப்புக் கொடுத்து நடிக்கும் அசாதாரண திறமைபெற்றிருந்தவர்.

'மாக்பெத்' என்னும் துன்பியல் நாடகத்தில் அழகுற எழுதிய சொல்லோவியங்கள கலையரசின் நடிக்கும் திறமைக்கு ஏற்றவை. ''வாழ்க்கை என்பது ஒரு நடக்கும் நிழலேயாகும்; ஓர் ஏழை நடிகன் மேடையின்.மேல் பெருமிதமாக நடக்கின்ருன்; வறிதே தன் உடலை அசைத்துக் குலுக்கி அலட்டிக்கொள்கின்ருன் அதற்குப்பின் அவனைப்பற்றியசெய்தி எதுவும்கேட்கப்படுவதேயில்லை, ஓர் அறிவிலியால், கூச்சலும், ஆரவாரமும் நிரம்ப அர்த்தமின்றிச் சொல்லப்படும் சுவையற்ற கதையே வாழ்க்கையாகும்.''

தமிழ் மக்களின் சிறந்த சொத்தான சைவசித்தாந்தம் பொதிந்திருக்கும் இந்தக் கூற்று ஷேக்ஸ்பியருக்கு மிகவும் இனிப்பாக இருந்திருக்கிறது.

அதேபோன்று மனித வாழ்வியல் பிணைப் பாடிய அருணகிரிநாதரின் புகழ் நிறைந்ததிருப்புகழ் ''நம்முடைய மனித வாழ்வு அறுகம்புல்லின் நுனியல் உள்ள பனித்துளியைப் போன்று மிகச் சிறிய அளவில் தொடங்கி பின்னர் பல பெரிய சிறிய நிகழ்ச்சிகள் நிரம்பி ஈற்றில் பிணமாக நெருப்பில் இட்டுப்பொசுக்கப்பெறுகின்றதென்று முடிகிறது. இதனைப்பலவிதத்திலும் நடித்துக் காட்டியவர் கலையரசர்.

ஆங்கிலத்திலும், தமிழிலும் நாம் படித்து அனுபவிக்கும் சொல்லோவியங்கள் நாடகமாக நடிக்கப்பெறின் அவை என்றும் அழியாத இலக்கியமாக மக்கள் உள்ளத்தில் வீற்றிருக்கும் தன்மையன.

இவ்வாறு நடிக்கும் திறனைப்பெற்ற கலையரசின் விசேட ஆற்றல் என்ன?

அதற்கும் விடைகாண ஷேக்ஸ்பியருக்கே போக வேண்டிய நிர்ப்பந்தம்!

'ஹாம்லெட்' என்ற சோக நாடகத்தில் கதாநாயகனுகிய ஹாம்லெட் தமது சகாக்களுக்கு நடிக்கும் திறனின் ரகசியத்தை வெளியிடுகிருர்.

''சொல்லுக்கு செயலையும், செயலுக்கு சொல்லையும் இணைக்கும் சக்தி நடிகனுக்கு இன்றியமையாதது,''

சுமார் ஐம்பது வருடங்களாக தமிழ் நாடகத்தின் தலைசிறந்த நாடகக்கலைஞன கலையரசுக்கு இவ்வாற்றல்கைவந்த கதையை இன்னும் பல ஆண்டுகளுக்கு கலைஞர் ஆராய்வதற்கு போதிய இடமுண்டு.

வாழ்க்கையின் திட்ப நுட்பங்களை, ஏற்ற இறக்கங்களை, இன்பதுன்பங்களை பளிங்குபோல் பிரதிபலிக்கும் கலையே நாடகம்; படிப்பினை அல்ல கற்பனையே இந்தக்கலையின் செல்வம் அக்கற்பனைக்குயிர் கொடுப்பது நடிகனின் தத்துவம்.

நடிகர்கள் நாடாளும் ஆற்றல் பெற்றுத்திகழும் இக்காலத்தில் கலையரசரின் புகழ் என்றும் நின்று நில்வ சமூகம் பொறுப்பான முயற்சியில் ஈடுபடவேண்டிய கடப்பாடு உடையது.

## கதிர்காம புராணம்

எல்லையில்மிதித்தாரேனும் இழிகுணமகற்றிமிக்க
நல்லவராகச்செய்து நவையறுகாட்சிதந்தே
எல்லையில்முத்திநல்கும் எழிற்சோதி காடேசன்தன்
மல்லலங்கமலபாதம் மனதினிற் கொண்டுவாழ்வோம்

வித்துவான் சி. நாகலிங்கம்பிள்ளை

# கேதீஸ்வரரைப்பாடியசுந்தரர்

சுந்தரர் துதி

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்
என்று முன்னீ சொன்ன பெருஞ் சொற்பொருளை
ஆழநினைந்திடில் அடியேன் அருங்கரணம் கரைந்து
கரைந்து ஊழியில் ஒன்றுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே.

—இராமலிங்க வள்ளலார்

ஈழத்திற் பாடல்பெற்ற சிவதலங்களுள் திருக்கேதீச்சரம் ஒன்று இராமேஸ்வரத்தில் நின்று மானசீகமாக வணங்கிய சுந்தரமூர்த்தி நாயனுர்.

'நத்தார்படை ஞானன்பசு
வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி
போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்
தொழு பாலாவியின் கரை
மேல்
செத்தாரெலும் பணிவான்
திருக் கேதீச்சரத் தானே'

என்று மனமுருகிப் பாடியுள்ளார்.

சுந்தரமூர்த்திநாயனுர் யார்? அவர் ஏன் இப்பூவுலகுக்கு வந்தார் என்பதை நாம் ஆராய்ந்து பார்த்தால் தேவலோகத்திலே ஈசுவரனுக்குப் பூக்கொய்து கொடுத்த ஆலால சுந்தரருக்கும், அம்பாளுக்குப் பூக் கொய்து கொடுத்த அனிந்திதை கமலினி என்னும் இரு பெண்களுக்கும் இடையே சிறிது அன்பு தலைகாட்டியதும் இறைவன், உங்கள் அன்பை நன்கு சாதகம் செய்வதற்கு வாயப்பான இடம் பூவுலகு தான் என்று அவர்களை இப் பூவுலகிற் பிறக்குமாறு அருள் புரிந்தார். இந்தவேளையில் ஆலாலசுந்தரர் இறைவனிடம் ஒரு வரம் கேட்டார். இறைவா! நான் பூவுலகிற் பிறந்து பிரபஞ்சத்தில் உழன்று திரியாது என்னைத் தடுத்தாட் கெண்டருள வேண்டும்' என்பதே அவ்வரம்.

திருநாவலூரிலே சடையனுருக்கும் இசைஞானியாருக்கும் புத்திரராக அவதரித்து நரசிங்க முனையர் என்னும் அரசரால் வளர்க்கப்பட்டு, புத்தூர் சடங்கவி சிவாசாரியாரின் புதல்வியை மணம்புரிகின்ற வேளையில் இறைவன் ஒரு கிழப்பிராமண வேடம் தாங்கி தடுத்தாட்கொண்டார்.

தேவலோகத்திற் பற்று வைத்த அனிந்திதை கமலினி என்னும் சங்கிலியாரையும் பரவையாரையும் அவர் திருமணம் புரிந்தே தமது பற்றுக்களை அறக்கவேண்டியதாயிற்று. வன்றெண்டர், தம்பிரான்தோழர் என இறைவனுலேயே பெயர் சூட்டப்பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனேடு தோழமை பூண்டு ஒழுகியமுறை சகமார்க்கம் என்னும் நெறியாகும்.

சுந்தரர் தாம் விரும்பியவற்றையெல்லாம் இறைவனிடம் இருந்துபெற்றுக் கொண்டார். பரவையார் ஒருமுறை சுந்தரமூர்த்திநாயனுரோடு ஊடல் கொண்டிருந்தபோது ஊடலைத் தீர்ப்பதற்கு சிவபெருமானே தூது சென்ருரென்ருல் சுந்தரர் தம் பெருமை சொல்லவும் படுமோ

சுந்தரமூர்த்தி சுவாமிகளது பெருமையை அறிந்த சேரமான் பெருமாள் நாயனுர் அவர்கள் நண்பரானுர்.

ஏழாந் திருமுறையைப் பாடிய சுந்தரர். ஆண்டவனிடமிருந் கேட்ட வரங்களையெல்லாம்பெற்று வாழ்ந்தார் அவர் அடியவர்க்கு அடியவர் என்று

[5-ம் பக்கம் பார்க்க]

பொன். பாக்கியம்

## யாழ்ப்பாணத்துப்பொதுசன நூல்நிலையம்-9

# அரியாலைப் பெரியாரின் அரிய முயற்சி

யாழ்ப்பாணத்துப் பெரியார்களுள் காலத்துக்குக் காலம் அரியாலை அளப்பரிய பணிபுரிந்த மகான்களைத் தந்துள்ளது. காசிப்பிள்ளை, அருளம்பலம், கனகரத்தினம் முதலான பெரியார்கள் வரிசையில் ஆர். சுப்பிரமணியம் என்பார் இடம்பெற்றிருந்தார். அவர் அமைதியாக வாழ்ந்துசெய்த தொண்டுகள் அதிகம் பிரபலிக்கமடையவில்லை.

மணியந்தோட்டம் என்னும் மதிப்புக்குரிய பெரிய நிலப் பரப்பில் இன்று நூற்றுக் கணக்கானோர் குடியியுள்ளார்கள். நூற்றுக்கும் அதிகமான ஏக்கர் நிலப்பகுதியில் தென்னையும் வான்பயிர்களும் செய்பயிர்களும் நிறைய உண்டு. சுப்பிரமணியம் அவர்களின் மகளையே மந்திரியார் சிற்றம்பலம் மணஞ் செய்திருந்தார்.

### க.சி. குலரத்தினம்

சுப்பிரமணியம் அவர்கள் அக்காலத்து யு. டி. சி. என்னும் நகரசபையின் பிரதிநிதியாயிருந்தவர். அடிக்கடி நகரசபைக் கூட்டத்தில் நூலகத்துக்கு நிதியுதவி கொடுக்குமாறு பிரேரித்து வந்தவர் விடாக்கண்டரான அவர் விடுத்த வேண்டுகோளுக்கமையவே நகரசபையினர் நூலகத்தைப் பொறுப்பேற்று நடத்தத் தீர்மானித்தனர். அதற்காதாரமான பிரேரணையையும் சுப்பிரமணியம் அவர்களே கொண்டுவந்தார்கள்.

### கைமாறிய படலம்

நூல்நிலையச் சங்கத்தாரின் பரிபாலனத்திலிருந்து நகரசபையினரின் பரிபாலனத்துக்கு நூல்நிலையம் கைமாறிய வைபவம், முன்னர் கிழக்கிந்திய வர்த்தகசங்கத்தாரிடமிருந்து ஆங்கிலேயர் ஆட்சிக்கு இலங்கை கைமாறிய வரலாறு போன்றதாகும்.

நகரசபையினர் தாமே ஒரு வாசிகசாலையை ஆரம்பித்து நடத்தலாம் என்று கருதிய வேளையில் ஆர். சுப்பிரமணியம் அவர்கள், இந் நூலயத்தையே பொறுப்பேற்று நடத்துமாறு பிர்ரரணைகொண்டு வந்தார்.

### காரியதரிசியின் கடிதம்

இவ்வாருக நூல்நிலைய பரிபாலன்சங்கத்தின் காரியதரிசியாய் க. மு. செல்லப்பா அவர்கள் நகரசபைத்தலைவருக்கு 21-12-34ல் எழுதிய கடிதம் இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்ருகும்.

தலைவர்
நகரசபை,
யாழ்ப்பாணம்

ஐயா,

தங்கள் சபையினர் எங்கள் நூல்நிலையத்தைப் பொறுப்பேற்று நடத்துதல் சம்பந்தமாக நிறைவேற்றிய பிரேரணையை எங்கள் காரிய நிர்வாகசபையினர் கருத்துடன் பரிசீலனைசெய்து 1-1-1935

(5-ம பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### பாணந்துறையில் மீண்டும் அசம்பாவிதம்!

கடந்த சில தினங்களாக பாணந்துறையில் இருக்கும் தமிழ் வர்த்தக நிலையங்கள் மீது காடையர்சள் பயங்கர வாதத்தை பிரயோகித்து வருகின்றனர்.

மதுபோதையில் தமிழ்வர்த்தக நிலையங்களுக்கு வந்து கப்பமாக பணமும் சிகரட்டும் கேட்பதும் மறுத்தால் வர்த்தக நிலையங்களையும் அங்கு உள்ள தமிழர்களை தாக்குவதும்கடந்த சில வாரங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதுவரை ஒன்பது வர்த்தக நிலையங்கள் தாக்கலுக்கு உட்பட்டு உள்ளன. இப்பயங்கர சம்பவங்கள் இன்னும் தொடரும் அறிகுறிகளும் தென்படுகின்றன. இதன் பின்னணியில் சிலபெரும்புள்ளிகள் தொடர்பு கொண்டுஉள்ளதாகத் தெரிகிறது.

பாணந்துறை வாசி.

ஃ ஃ

### நூலகத்தின் புதிய வரலாற்றையும் எழுதுக!

சென்ற சில தினங்களாகத் தங்கள் தினசரியில் - யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல் நிலையத்தின் ஆரம்ப சரித்திரம் வெளிவருவது மிகவும் பொருத்தமாகத் தோன்றுகின்றது. எரிந்து சாம்பலான நூல் நிலையத்தை நிலைத்து மீண்டும் சுடர்விட எடுத்து வரும் முயற்சிகளும் தொடர் கட்டுரையாக எமது மதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமான சகோதரன் க. சி. கு. எழுத வேண்டும் ஈழநாட்டில்.

[5ம் பக்கம் பார்க்க]

## நல்லைக்கந்தன் 4-ம் திருவிழா

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய
குமரன் தன்னைப்
பாலனென்றிருந்தேன் அந்நாட் பரிசிவை
உணர்ந்திலேன்யான்
மாலயன்தனக்கும் ஏனைவானவர் தமக்கும்
யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி
யன்றே

கந்தபுராணம்

### துரைராசா எழும்பியபோது

# இருவர் பிடிக்க 6-ம் எதிரி நீண்டவாளால் வெட்டினுர்

## வல்லை முக்கொலை வழக்கில் சாட்சியம்

[புலோலி நிருபர் திரு॰செல்வம்]

''பஸ்ஸிலிருந்து பாய்ந்த துரைராசா நிலத்தில் விழுந்து எழும்பிக் கொண்டிருக்கும் போது இருவர் அவரைப் பிடிக்க 6ம் எதிரி நீண்ட வாளால் ஓங்கி அவருக்கு வெட்டினுர். அந்த வெட்டு துரைராசாவுக்குப் பட்டதோ, படவில்லையோ என்பது எனக்குத் தெரியாது''

இவ்வாறு வல்லை முக்கொலை வழக்கு விசாரணையில் சாட்சிய மளித்த கம்பர்மலை அறுவர் கொலைவழக்கு எதிரி வேலுப் பிள்ளை மகேந்திரன் 1ம் எதிரி முதல் 8ம் எதிரிவரையில் ஆஜரான சட்டத்தரணி எஸ். ஜெயசிங்கத்தால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது குறிப்பிட்டார். இவ் வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதி மன்றத்தில் நீதவான் திரு வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

சாட்சியை சட்டத்தரணி தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: துரைராசாவையும் உம்மையும் சேர்த்து ஒரு கைவிலங்கில் மாட்டப்பட்டிருந்தது? ஆம்.

சட்: இந்த கைவிலங்கைப் போட்டு முன்பும் உன்னை மன்றிற்குக் கொண்டு வந்திருக்கிறுர்கள்?—ஆம்.

சட்: இந்தக் கைவிலங்கிற்குத் திறப்பு போட்டுத் திறந்தால் அது இரண்டு பக்கமும் விரிந்து திறபடும்?—ஆம்.

சட்: நீர் எப்போ பஸ்ஸின் முன்பக்கம் போனீர்? பஸ்சை எடு என்று சத்தம் போட்ட பின் வெடிச்சத்தம் கேட்டு அதன் பின்பு துரைராசா பஸ்சிற்கு வெளியே பாய்ந்ததன் பின் அவருக்கு வெட்டப்பட்டதைக் கண்டதன் பின்னரே நான் பஸ்சின் முன்பக்கத்தால் இறங்கினேன்.

சட்: துரைராசாவுக்கு வெட்டு விழுந்ததை நீர் கண்டீரா? துரைராசாவுக்கு பஸ்சிற்கு வெளியில் வெட்டுவிழும் போதே நான் பஸ்சிற்குள் இருந்த சீற்றிலிருந்து எழும்பி பஸ்சின் நடுவில் இருந்து பார்த்தேன். நான்பஸ்சிற்குள்எழும்பி நின்று துரைராசாவைப் பார்க்கும்போது எங்களைக் கூட்டி வந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களைக் காணவில்லை.

சட்: அந்த நேரத்தில் நீர் எல்லாவற்றையும் அறியக் கூடிய நிலையில் இருந்தீர்— ஆம்.

சட்; நீர் இருந்த பக்கத்து ஜன்னலாலா துரைராசா பாய்ந்தார்?—இல்லை வேறு ஜன்னலால்.

நானும் துரைராசாவும் பஸ்சிற்குள் இடதுபக்கசீற்றில் இருந்தே வந்தோம். எங்களுடன் வந்த மற்ற விளக்கமறியல் கைதிகள் பஸ்சின் வலது பக்கத்தில் இருந்து வந்தார்கள். துரைராசா ஜன்னலினூடாக வெளியே பாய்ந்தபோது என்னுடன் வந்த மற்ற விளக்கமறியல் கைதிகள் இருந்தார்களா என்பதை நான் பார்க்கவில்லை. துரைராசா என்னைப் விட்டுப் பாய்ந்த பின்னர் மற்றக் கைதிகளை நான் காணவில்லை.

துரைராசாதான் இருந்த சீற்றிற்கு மற்றப் பக்கம் போய் ஜன்னலால் பாயும் போது துரைரசா பாய்ந்த ஜன்னல் பக்கம் பிரயாணிகள் இருந்தார்களா என்பது பற்றி எனக்குத் தெரியாது, துரைராசா தன்னுடைய சீற்றை விட்டு எழும்பி ஜன்னலுக்குள்ளால் பாயும்வரைக்கும் அவரைக் காணவில்லை.

### வெட்டு விழும்போது கண்டேன்

ஜன்னலுக்குள்ளால் நிலத்தில் விழுந்த பின்பு அவருக்கு வெட்டுவிழும் போதே கண்டேன். துரைராசாவின் கைவிலங்கு எப்படிக்கழன்றது என்பது எனக்குத்தெரியாது. அவர் பாய்ந்த ஜன்னல் பக்கத்திற்கு எப்படிப்போனுர் என்பதும் தெரியாது.

நான்துரைராசாவைக்கண்டபோதே எதிரி அவருக்கு வெட்டுவதைக்கண்டேன். ஆனுல் அந்தவெட்டு அவருக்குப்பட்டதோ படவில்லையோ தெரியாது. அந்த நேரத்தில் எனக்குத்தெரியாத இருவர் துரைராசாவைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். 6ம் எதிரி துரைராசாவுக்கு வாளால் வெட்டினுர். எங்கே வெட்டு விழுந்ததென்பது தெரியாது.

6ம் எதிரி துரைராசாவுக்கு வெட்டியவாள் நியாயமான நீளமானவாள். மூன்றரை அடி நீளமிருக்கும். அந்த வாளால் ஓங்கி துரைராசாவை வெட்டுவதைக் கண்டேன். துரைராசா நிலத்திலிருந்து எழும்பிக் கொண்டிருக்கும் போது இருவர் பிடிக்க 6ம் எதிரி வாளால் வெட்டினுர். துரைராசவைப்பிடித்த இருவரினதும் முகங்களை நான் காணவில்லை.

சாட்சியைச் சட்டத்தரணி வி. என். நவரத்தினம் குறுக்கு விசாரணைசெய்தார்.

சாட்சிகுறிப்பிட்டதாவது:— என்னுடன் சோடியாக கைவிலங்கிடப்பட்டிருந்தது துரைராசாவையே என்பதில் எந்த விதமான சந்தேகமுமில்லை. அத்துடன் நாங்கள் வரும் போது பஸ்ஸின் இடதுபக்கத்தின் ஜன்னலோடு நான் இருந்தேன் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. நாங்கள் இருந்துவந்த ஆசனம் இரண்டு பேர் இருக்கக்கூடிய ஆசனம். நானும் துரைராசாவும் இருந்த சீற்றுக்குப் பின்பக்கமாக உள்ள அடுத்த சீற்றில் தில்லைநடராசாவும், அப்புத்துரையும் இருந்துவந்தார்கள்.

துரைராசாவைப் பிடித்த இருவரின் முதுகுப்பக்கம் மாத்திரமே எனக்குத் தெரிந்தது, அவர்களது முகத்தைப் பார்க்கமுடியவில்லை. நான் ஜன்னலுக்கூடாகத் துரைராசாவைப் பார்க்கும்போது என்னுடன் வந்த மற்ற எந்த விளக்கமறியல் கைதிகளையும் நான் காணவில்லை. நான் பஸ்ஸை விட்டு இறங்கிய நேரத்தில் பஸ்ஸில் ஆட்கள் இருந்தார்கள். ஆனுல் நான் சென்ற பாதையில் நெருக்கடி இருக்கவில்லை. வெடிச்சத்தம் கேட்ட போது அது எத்திசையால் வந்தது என கவனிக்கவில்லை ஒருவர் பஸ்ஸிற்கு வெடி வைத்தார் அவரை எனக்குத் தெரியாதென்று கூறினேன். வெடி வைத்தவரைக் காணவில்லை என்ற கருத்திலேயே. பஸ்ஸை நோக்கி பற்றைக்குள் இருந்து வந்த நபர்கள் முன்னும் பின்னுமாக வந்தார்கள். முன்னுக்கு எத்தனை பேர் வந்தார்கள் என என்னுல் கூறமுடியாது.

நான் துரைராசாவுக்கு 6ம் எதிரி ஓங்கி வெட்டுவதைக் கண்டேன். எங்கேஅவ்வெட்டு விழுந்தது என்பதைக் காணவில்லை என்று கூறியுள்ளேன். துரைராசாவுக்கு வெட்டு விழுந்தபோது துரைராசாவைச் சுற்றி மூன்று பேர் நின்றுர்கள். நான் பஸ்ஸால் இறங்கி வெளியே போகும் போது சுப்பிரமணியத்தையோ இராஜரட்டினத்தையோகாணவில்லை. பஸ்ஸால் இறங்கி சுடலைப் பக்கமாக 100 யார் வரை ஓடியிருப்பேன். அப்படி ஓடும்போது என்னை யாராவது கலைத்தார்களா என்பது எனக்குதெரியாது. நான் அப்படி ஓடி வயலுக்குப் பக்கத்து சுடலையில் இருக்கும் பற்றையைச் சுற்றிக்கொண்டு இருந்தேனேயொழிய ஒருநிலையில் நிற்கவில்லை. அப்படிப் பற்றையைச் சுற்றிக்கொண்டு நின்றது 10 நிமிடங்கள் இருக்கும்.

என்னை அப்போது ஒருவரும் கலைக்கவில்லை. நான் பஸ் நின்ற இடத்திற்குத் திரும்பி வந்தபோதும் என்னை ஒருவரும் கலைக்கவில்லை. சேட்டைச் சாரத்திற்குள் வைத்துக்கட்டிக்கொண்டே வந்தேன் அந்த நேரத்தில் அவ்விடத்தில் வந்த 15 பேருச்கும் என்னைத் தெரியுமோ தெரியாது.

நான் பஸ்சிற்குள் இருந்த போது வெளியில் ருந்து ஆட்கள் பஸ்ஸை நோக்கி ஓடிவந்ததைக் கண்டு நான் சத்தம் போட்ட அந்த நேரத்தில் வெடிச்சத்தமும் கேட்டது. [இ]

## நூலகத்தின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு, இந்த பொதுசன நூலகத்துடன் 1935 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ். இந்துக்கல்லூரியில் மேல் வகுப்பு மாணவனுக இருந்த காலம் முதல் தொடர்புவளரத் தொடங்கியது. ஷேக்ஸ்பியர் நாகலிங்கமும் சங்கரப்பிள்ளை ஆசிரியருமாகச்சேர்ந்து வாசிக்கும் ஒரு அரிய பழக்கத்தை ஆரம்பித்து வைத்தனர் யாழ் இந்துக்கல்லூரி அதிபரின் அனுசரணையுடன் நூலகத்தின் அங்கத்தவனுகச் சேர்ந்து அன்று எனக்குக் கொடுத்த அங்கத்துவ அட்டை இன்றும் என்வசம் இருக்கின்றது. இந்த நூலக வாயிலாக எனது இலக்கியப் பசியை, அறிவுப்பசியை ஞானப்பசியை ஒருவாறு தீர்க்க முடிந்தது.

தமிழன் தமிழனுக வாழ வேண்டும். தமிழ்ப் பண்பாடுகள் தலைஓங்கவேண்டும். சமயமும் தமிழும் ஒருமித்து வளர இந்த-வரப்போகும் நூல்நிலையம்—கால் கோளாக இருக்க வேண்டும். தர்மம் காக்கும் தபோவனமாக மாறவேண்டும். மாற்றுரும் தங்கள்பாவச் செயலுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும். இரவுபகல் இந்த புனிதபூமி தாங்கும் அறிவாலயத்தை நாம் காத்திடவேண்டும். ஆம்! காப்பாற்றவேண்டும். இதற்கான மூலவளத்தை யாழ். முதல்வர் இராஜ விசுவநாதன் உருவாக்கவேண்டும். நெருப்பு, காற்று, மழை, பகைவர் இவைகள் இனிமேல் கனவிலும் இல்லை என்பதனை வளரும், வரப்போகும் எங்கள் அன்புச் சமுதாயத்துக்கு அறுதியிட்டு மூத்திரைகுத்தி எழுதிவைக்க வேண்டும்.

ம. சி. சிதம்பரப்பிள்ளை.
தெல்லிப்பழை.

T. V. ஏரியல் அமைப்பில்
முதன்மைமிக்க ஸ்தாபனம்
சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை
T V யில் சிரமமின்றி பார்க்க
உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.
நொடிப்பொழுதில், T V ஏரியல்
கோளாறுகள் சரி செய்யலாம்.
எமது பராமரிப்பு சேவை
24 மணி நேரமும் செயல்படுகின்றது
சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்
எடுப்பதற்கு
குறைந்த கட்டணம்
பல்வேறு TV செட்டுகளை
பினுன்ஸ் வசதியுடன் பெறலாம்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
ஶ்ரீதர் தியேட்டர் முன்,
யாழ்ப்பாணம்.

## அரியாலைப் பெரியாரின்...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

தொடக்கம் நூல்நிலையத்தை நகரசபையின் பொறுப்பில் ஒப்படைப்பதற்குத் தீர்மானித்து, விசேட பொதுக்கூட்டத்தில் அனுமதிபெறுவவதற்கு 20-12-34ல் கூடினர். அக்கூட்டத்தில் நூல்நிலையத்தை குறித்தநாளில் ஒப்படைப்பதற்குத் தீர்மானித்தார்கள். இங்ஙனம் கையளிக்கும்போது இங்குள்ள நூல்கள், தளபாடங்கள் யாவற்றையும் உங்களிடம் ஒப்படைக்குமாறு எனக்குப் பணித்துள்ளார்கள். எனவே தாங்கள் தயவுசெய்து தங்கள் உத்தியோகத்தர் ஒருவரை நாளையோ அன்றி வருகிற திங்கட்கிழமையோ வந்து இவற்றைப் பொறுப்பேற்குமாறு பணிப்பீர்களாக. இடையில் விடுமுறைநாட்கள் வருவதால் இங்ஙனம் நாட்களை நான் குறிப்பிட்டுள்ளேன். எங்கள் நூலக சங்கத்தார் 31-12-1934 வரையுள்ள கடன்கொடுக்குமதி யாவற்றையும் தீர்த்துவிட்டார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்ஙனம்
தங்கள் விசுவாசமுள்ள
ஊழியன்
க. மு. செல்லப்பா

### நகரசபைத் தலைவரின் பதில்

நிர்வாகத் திறமையுள்ள நகரசபைத்தலைவர் உடனடியாக மறுநாளே பதில் எழுதியிருந்தார்.

இலக்கம் 2-98
நகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
22-12-1934

மத்திய இலவச
தமிழ் நூல்நிலையம்
யாழப்பாணம்

ஐயா,

தாங்கள் 21-12-34 இல் எழுதிய கடிதத்தின்பிரகாரம், எங்கள் நகரசபை நூல்நிலையத்துக்கான செலவினை ஒதுக்கியுள்ளபடியால், அது1-1-1935 முதல் உங்கள் நூல்நிலையத்தைப் பொறுப்பேற்கும் என்பதை அறியத்தருகிறேன்.

நகரசபைச் செயலாளரிடம் நூல்நிலையத்தை விடுமுறை நாட்களில் வசதிபோலப் பொறுப்பேற்கும்வண்ணம் பணித்துள்ளேன். ஆகவே தாங்கள் அவரிடம் அறிவுறுத்தவேண்டியவற்றைக் கூறவும்,

இங்ஙனம்
தங்கள் விசுவாசமுள்ள
ஊழியன்
ஆர். ஆர். நல்லையா
தலைவர்
நகரசபை
யாழ்ப்பாணம்.

(தொடரும்)

## பரிசளிப்பு விழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மாகவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல்வித்தியாலய அதிபர். திரு. வி. ரி. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

காவலூர் எம். பி. கா. பொஇரத்தினம் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு சி. இராசநாயகம் இவ்விழாவைத் தொடக்கிவைப்பார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. வே. க. சேமசுந்தரம் ஜே. பி, புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் வீ. வ. நல்லதம்பி, புங்குடுதீவு கிழக்கு கிராமோதய சபைத்தலைவர் திரு. நா. கார்த்திகேசு ஆகியோர் வாழ்த்துரைவழங்குவர்.

புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. குகதாசன், யாழ். கல்வித்திணைக்களத்தைச்சேர்ந்த பொறியியலார் திரு. எம். ஏ பிரான்சிஸ், கல்வியதிகாரி திரு. க பொன்னம்பலம் ஆகியோர் இவ் விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெதும். (க)

## நாடு திரும்புகிறுர்

(கிளிநொச்சி)

லண்டன், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள கிளிநொச்சி எம் பி. திரு. வீ. ஆனந்தசங்கரி தமது பயணத்தை முடிந்துக் கொண்டு அடுத்த மாதம் 7ம் திகதி நாடு திரும்புகிறுர்.

## கேதீஸ்வரரைப் ....

[4-ம்பக்கத் தொடர்ச்சி]

பாடியுள்ளதை நாம் சிந்திக்க வேண்டும். பெரியனவற்றுள் எல்லாம் மிகப் பெரியவனுன இறைவன் தொண்டர்தம் உள்ளத்துள் ஒடுக்கமாகி உள்ளான். ஆதலால் தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என்கின்றுள் ஔவை. ஆண்டவன் விரும்பி உறைவது அடியவருடைய உள்ளமாகிய தாமரை மலரிலேயே யாம்.

உள்ளத்தாமரையை நாம் மிகப் பரிசுத்தமாக வைத்திருப்பதற்குத் தெய்வ உபாசனை தூய்மையான வாழ்வு, மாசற்ற சிந்தனை என்பன அவசியம்.

இத்தகைய பரிசுத்தம் சமய வாழ்வு ஒன்றினுலேயே பெறத்தக்கதாம். நாயன்மார்களது வரலாறுகளைப் படித்தல், குரு பூசைவிழாக்கள் கொண்டாடுதல், மகேசுர பூசைகள் செய்தல் என்பன சமயவாழ்வில் ஓரங்கமாக விளங்குகின்றன. தனுலேயே சைவத் தமிழ் உலகு நாயன்மாருக்கும் சைவப்பெரியார்களுக்கும் குரு குருபூசைகளைச் செய்கின்றது.

"3-ம் எதிரி அடித்தபோது

# 50 பேர் நின்றூர்கள்; எவரும் விலக்குபிடிக்கவில்லை'

## மிருசுவில் கொலைவழக்கு விசாரணை

(சாவகச்சேரி)

''சம்பவதினம் நானும் காலமான ஆழ்வாப்பிள்ளை என்பவரும் ஒரு வீட்டுக்காகப் பூட்டுத்தடி கட்டிக்கொண்டிருந்தோம். அதேநேரம் அவரது வீட்டில் அவரது மனைவியும் பிள்ளைகளும் இருந்தனர். ஆழ்வாப்பிள்ளையின் மருமகன் செல்வம் என்பவர் வந்து ஆழ்வாப்பிள்ளையின் சகோதரருக்கு வருத்தம் கடுமையாய் இருக்கிறது எனக் கூறினூர்''

மிருசுவில் கொலைவழக்கில் சாட்சியமளிக்கையில் நித்தியவெட்டை முள்ளியாவளையைச் சேர்ந்த சி. சுப்பிரமணியம் என்பவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்:

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1980ல் ஜூலை 8ல் மிருசுவிலைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை அல்லது கிளியன் என்பவரை அதே ஊரைச் சேர்ந்த சி. துரைசிங்கம், சி. சிவஞானம், சி. சிவசுப்மணியம், சி.சிவராசா, சி. சங்கரப்பிள்ளை என்பவர்கள் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்காரர் சார்பில் சார்ஜன்ட் வி. செல்லையாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி வ. செல்லத்தம்பியும் 1ம், 2ம், 3ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி நிமாலினி அம்பிகைபாலன், அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினமும் 4ம், 5ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் ஆஜராகினர்.

தொடர்ந்து சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது: உடனே ஆழ்வாப்பிள்ளையும் நானும் சைக்கிளில் பழைய வாய்க்கால் இராசப்பன் வீட்டுக்குச் சென்று சைக்கிளை வெளியே வைத்து பூட்டிவிட்டுச் சென்றோம். சனசஞ்சடியற்ற அவ்வேளையில், ஆழ்வாப்பிள்ளை முன்னரும், நான் சற்றுப் பின்னரும் சென்றுகொண்டிருந்தோம். அப்போது இராசையா என்பவர் முற்பக்கத்தால் ஓடிவந்து எனக்கு அடித்தார். இதை ஆழ்வாப்பிள்ளை என்பவரும் கண்டார். இராசையா என்பவர் சீவின புடம்பண்ணிய ஒரு கொட்டனூல் அடித்தார். இதுதொடர்பாக அன்றிரவு பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுத்துள்ளேன். அதில் சிவசுப்பிரமணியம்தான் அடித்ததென்று கூறியுள்ளேன். 3ம் எதிரி அடித்தபோது சுமார் 50 பேர்வரை நின்றூர்கள். ஒருவரும் விலக்குப்பிடிக்கவில்லை. அடியை வாங்கிய ஆழ்வாப்பிள்ளை இராசப்பன் வீட்டிற்கு ஓட நான் வந்தவழியே திரும்பி ஓடினேன்.

சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் சாட்சியை குறுக்கு விசாரணை செய்கையில், எதிரிகள் குடியிருக்குமிடத்திற்கும் தான் குடியிருக்குமிடத்திற்கும் 3 மைல் தூரமிருக்குமெனவும் எதிரிகளில 3 பேரின் பெயர் மாத்திரம் தனக்குத் தெரியுமெனவும் சில தினங்களுக்கு முன் ஒரு சந்தர்ப்பத்தில் சின்னக்குட்டி மக்கள் என ஆழ்வாப்பிள்ளை தனக்கு கூறியதாகவும் முதல் 3 எதிரிகளும் முறையே இராசையா சிவசுப்பிரமணியம், துரைசிங்கம் எனவும் 4ம், 5ம் எதிரிகள் பெயர் தெரியாதெனவும், ஆழ்வாப்பிள்ளை வீட்டுக்குத் தோட்டவேலை செய்வதற்காக வந்தபின்தான் இந்த எதிரிகளைத் தெரியுமெனவும் சம்பவம் நடந்தது இராசக்கோன் வீட்டடியில் எனவும் கூறினூர்.

2ம் எதிரியின் பெயரை இரண்டு தரம் சாட்சி மாறிப் பெயரிட்டு அழைத்தபோது சட்டத்தரணி அம்பிகைபாலன் இருமுறை கூறிய பெயரில் ஒன்றுதன்னும் 2ம் எதிரிக்குரிய பெயரல்ல என்றூர். சாட்சி நான் அறிந்தவரையில் 2ம் எதிரியின் பெயர் இராசையா என்றூர்.

சட்டத்தரணி வ. செல்லத்தம்பியின் குறுக்குவிசாரணைக்கு சாட்சி பதிலளிக்கையில் இறந்தவர் கிளியின் அல்லது ஆழ்வாப்பிள்ளை என்றும் அவர் இராசக்கோன் வீட்டுக்கு ஓடும்போது 2ம், 3ம், 4ம் எதிரிகள் துரத்தி அடித்தார்கள் என்றும் கூறினூர்.

அடுத்த தொடர் விளக்கத்தை நீதிபதி எம். எச். காரியப்பர் அடுத்த மாதம் 31ம் திகதிவரையில் ஒத்தி வைத்தார். [க]





அருந்துங்கள்
தெம்பூட்டும் மதுரமான
ஒரேஞ் பார்லி
நெக்டோ
தரமுயர்ந்த இரு யானை மார்க் குளிர் பானங்கள்
வ.மா.வில 2/45 எலிபண்ட் ஹவுஸ்


## வரவேற்பும் பிரிவுபசாரமும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலய ஆசிரியர் ஒன்றியத்தினர் கிளிநொச்சி பிரதேச சபைத் தலைவர் திரு. என். சுப்பிரமணியம், ஆசிரியர்களான திருமதி சௌரிதேவி பரமேஸ்வரன், திரு. எஸ். கனகசுந்தரம் ஆகியோருக்கு வரவேற்பு உபசாரம் ஒன்றினையும் ஆசிரியர்களான திரு. க. குமாரசாமி, செல்வி தே. பரமேஸ்வரி ஆகியோருக்குப் பிரிவுபசாரம் ஒன்றினையும் ஒருமித்து நடத்தினூர்கள்.

வித்தியாசாலை அதிபர் திரு ஏ. சே. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கிளிநொச்சிவட்டாரக் கல்விஅதிகாரி திரு. மா. சண்முகநாதன் சமூக சேவையாளர் திரு இ. கிருஷ்ணராசா ஆகியோர் உரையாற்றினூர்கள். [கி]

## பெற்றேரின்....

[3ம் பக்கத் தொடர்ச்சி]

டாக்டர் திருமதி டி. சிறீதரன் தாய் திருமதி தம்பிராசா ஆகியோரும் சர்ட்சியமளித்ததைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி பெற்றேரின் கவலையீனத்தால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினூர்.

மருந்தகம் நடாத்த

## சனசமூக நிலையம் கட்டடம் அன்பளிப்பு!

(பண்டத்தரிப்பு)

ஏழாலை அரசினர் மத்திய மருந்தகத்தை ஏழாலைக் கிராமத்தில் தொடர்ந்து இயங்கச் செய்வதற்காகத் தமது நிலையக்கட்டிடத்தை இலவசமாக சுகாதாரத் திணைக்களத்திற்கு அன்பளிப்புச் செய்வதற்கு ஏழாலை மத்திய சனசமூகநிலையம் முன்வந்துள்ளது.

ஏழாலையில் இயங்கிவந்த மருந்தகத்தை இடவசதியின்மை காரணமாக மல்லாகத்திற்கு இடமாற்றம்செய்வதற்குச் சுகாதாரத் திணைக்களம் எடுத்த முயற்சி தற்போது கைவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மருந்தகம் மல்லாகத்திற்கு இடமாற்றம்செய்வதால் இப்பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் வைத்திய வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது சிரமப்பட நேரிடும் என்று பலத்த ஆட்சேபம் மானிப்பாய் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கத்திற்கு ஊடாக சுகாதாரச் சேவை அத்தியட்சகருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஏழாலை மத்திய சனசமூக நிலையம் தமது சொந்தக் கட்டிடத்தைச் சுமார் ஐயாயிரம் ரூபா செலவில் புனரமைப்புச்செய்து மருந்தகத்தை அங்கு இடமாற்றம் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

இம்மாதம் 30-ம் திகதியன்று யாழ். மாவட்ட சுகாதாரச் சேவை அத்தியட்சகர் டாக்டர் கே. மாணிக்கம் புதிய கட்டிடத்தில் மருந்தகத்தைத் திறந்துவைப்பார். மானிப்பாய் தொகுதி எம்.பி. திரு. வி. தர்மலிங்கம், யாழ். அபிவிருத்தி சபைதலைவர் திரு. சு. நடராசா ஆகியோர்உட்பட மற்றும் பலர் இவ்வைபவத்தில் கலந்துகொள்வார்கள். (க)

## "ஆசிரியர்களுக்கு திட்டமிட்ட இடமாற்றமுறை வேண்டும்"

(அளவெட்டி)

ஆசிரியர்களுக்கு எமது நாட்டில் குறைந்த சம்பளமே வழங்கப்படுகிறது. அநேகமான நாடுகளில் ஆசிரியர்களின் சம்பளத்திட்டம் ஏனைய தொழில் புரிவோரின் சம்பளத் திட்டத்திற்குச் சமமாக உள்ளது. இதனை இன்று அரசாங்கமும் உணர்ந்துள்ளது. இதற்கு வெகுவிரைவில் தீர்வுகாணப்படும் என நம்புகிறேன்.

அளவெட்டி அருணசலம் வித்தியாசாலை வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வித்தியாசாலையின் பழைய மாணவரும் சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியருமான திரு. ரி. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

வித்தியாசாலை அதிபர் திரு. கே. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிவசுப்பிரமணியம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தொழில் செய்வோருக்கு வழங்கப்பட்டுவரும் விசேட சலுகையான தொழில் அலவன்ஸ் படிப்பிக்கும் பயிற்சி பெற்ற எந்த ஆசிரியருக்கும் வழங்கப்படாதது மிகக்கவலைக்குரியது.

### இடமாற்றம்

ஆசிரிய சேவையில் திடீர் இடமாற்றங்களும் ரத்துக்களும் இருப்பது சர்வசாதாரணமாகிவிட்டது. இதுவும் கவலைக்குரியது. ஆசிரியர்களுக்கெனத் திட்டவட்டமான இடமாற்ற ஒழுங்குகள் இருத்தல் அவசியமாகும்.

### திட்டவட்டமான பதவி உயர்வு

அதிகமான வேறு சேவைகளில் ஒருவர் சேரும்போதே சாதாரண நடைமுறைகளில் அவர் என்ன பதவி உயர்வை எப்பொழுது எப்படி அடைவார் என்பது அவருக்கும் மற்றவர்களுக்கும் தெரியும். சேவை அடிப்படையில் ஒரு நாள் வித்தியாசமே பதவி உயர்வுக்கு முக்கிய காரணியாகவுள்ளது. ஆனல் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவருக்கு எப்பொழுது எந்தச் சந்தர்ப்பத்தில் என்ன பதவி உயர்வு கிடைக்குமென்பது ஒருவராலும் கூறமுடியாது. பதவி உயர்வுகள் எத்தனையோ நிபந்தனைகளில் தங்கியுள்ளது. இந்த நிபந்தனைகளோ காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் ஆட்களுக்கு ஆட்கள் வித்தியாசப்படுகின்றன. எனவே ஆசிரியர்களுக்கெனத் திட்டவட்டமான பதவி உயர்வுத்திட்டம் இருத்தல்வேண்டும்.

காலத்திற்குக் காலம் குறுகிய இடைவெளிகளில் பாடத்திட்டங்கள் மாற்றப்படுவதால் மாணவரின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இது தவிர்க்கப்படவேண்டும்.

மாணவர்கள் தோல்விகளே வெற்றியின் படிகளெக் கொண்டு கல்வியைக்கற்று முன்னேறவேண்டும்.

திருமதி நகுலாதேவி சிவசுப்பிரமணியம் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினூர். (இ)

## எதிரிக்கு ரிமாண்ட்

[சாவகச்சேரி]

கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடனுகப்பெற்ற 400 ரூபாவை கட்ட முடியாது எனக் கூறிய அப்பகுதியைச் சேர்ந்த ஆழ்வான் கணபதி என்பவர் ஒரு கிழமை ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில்விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது கடந்த இரண்டு முறை மன்றுக்குச் சமூகங்கொடுக்கத் தவறியதால் கிராம சேவகரால் ஆஜர் செய்யப்பட்டார். [க]

## யானைகள் அட்டகாசம்

[வவுனியா]

வரட்சி நிலவும் வவுனியா மாவட்டத்தில் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து அட்டகாசம் புரிகின்றனவாம்.

இங்கு நீண்ட பல மாதங்களாக வரட்சி நிலவுவதால் குடிப்பதற்கு நீரின்றி யானைகள் கிராமங்களில் புகுந்து மக்களை பீதி கொள்ள செய்கின்றனவாம்.

வற்ருத கிணறுகள் கூட இந்த வரட்சியினுல் வற்றி வரண்டு காணப்படுகின்றன. [இ]

## அமைச்சர் 'தேவா' மன்னருக்கு விஜயம்

[மன்னர்]

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி மன்னர் மாவட்டத்திற்கு விஜயம் செய்வார்.

இவர் மன்னர் மாவட்டத்தின் பல கிராமங்களுக்கும் செல்லவிருக்கின்றார். (க)

## லெபனனில் மேலும் பலர் பாதுகாப்பாக உள்ளனராம்

[கொழும்பு]

லெபனனில் மேலும் பல இலங்கையர் பாதுகாப்பாக இரும்பதாக தகவல் கிடைத்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கிடைத்த இத் தகவல்கள் அவர்களின் குடும்பங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஜெனிவாவிலுள்ள செஞ்சிலுவைச்சங்க தலைமைச் செயலகத்திற்கு, லெபனனிலுள்ள 76 இலங்கையர் பற்றிய தகவல் கடைசியாக கிடைத்துள்ளது. அங்கிருந்து இத்தகவல், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கிடைத்தது.

ஏற்கனவே, லெபனனிலுள்ள 140 இலங்கையரின் தகவல்கள் செஞ்சிலுவைச் சங்கமூலம் கிடைத்திருந்தது.

4-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீதேவி
குரு (கலர்)

ராஜா [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி, பத்மினி, எம். ஆர் ராதா, நாகேஷ்
சித்தி
(புதிய பிரதி)

ராணி (யாழ் நகர்) 4-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
100வது வெற்றித் திருநாளைநோக்கி
கார்த்திக்-ராதா-தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
27—29-7-82 மூன்று தினங்கள் மட்டும்
சிவாஜி ஜெயலலிதா
"பட்டிக்காடா பட்டணமா"
புதிய பிரதி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர், ஜெயலலிதா, சோ நடித்த
வந்தாளே மகராசி
இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

இன்னும் 2 தினங்கள் மட்டும்
றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
மோகனப் புன்னகை (கலர்)
30-7-82 முதல் 'கயலும் கயரும்' (மலையாளம் கலர்)

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
10-30, 2-00, 4-30, 7-00, 9-30
JIM KELLY in
The Tatoo Connection
(Karate Film)
அடுத்த வெளியீடு! பணமா பாசமா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்-சாவித்திரி
மகாதேவி

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
கல்யாணமாம் கல்யாணம்

HARAN (Jaffna) Daily 5 Shows
Spectacular Fights. A film that will entertain you from start to finish
Starring Sonny Chiba.
"Chiba is the natural - Successor to Bruce Lee"
Play Boy Magazine
KARRATE WARRIORS
(Strictly for Adults)

## இன்றைய பலன்

ஆடி மாதம் 12-ம் திகதி
புதன்கிழமை
(28—7—82)

மேடம்: இதயம் இன்று இன்பத்தால் விம்மும். குடும்பத்தில் உறவு முறைகள் மிகவும் அன்பு கொண்டதாக இருக்கும். சுமுகமான தினம்.

இடபம்: அதிக அலைச்சல் உங்களுக்கு எரிச்சலைத் தரும். தொழில் துறையில் வருமானம் மிகவும் மட்டமாகவே இருக்கும். நண்பர்களின் ஆசை வார்த்தைகளில் மயங்க வேண்டாம்.

மிதுனம்: தெளிந்த மனம் தெய்வ குருபக்தியுடன் தேடியது கிடைக்கும். பரோபகார சிந்தை வளரும். பொதுப் பணியை நாடுவீர் நல்லதினம்.

கடகம்: எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள். மனதில் புதிய எண்ணங்கள் வட்டமிடும். வியாபாரிகளுக்கு அதிக ஆதாயம் கிடைக்கக் கூடும்.

சிங்கம்: புதிய கோணத்திலிருந்து வரவுக்கு இடமுண்டு. துணிவையே துணையெனக் கொண்டு காரியங்களைச் சிறப்பாக செய்வீர்கள். நல்லநாள்.

கன்னி: நிதியில் முடக்கம் ஏற்படும். சிலர் வீண்பழிக்கும் இலக்காவார்கள். விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவை எடுக்கும். துணிச்சலுடன் எதிர் நீச்சல் போடவும்.

துலாம்: மனப்போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம். இதன் மூலம் கைகலப்பும் ஏற்படலாம். பொறுமைநன்று.

விருச்சிகம்: மேலதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுவதற்கு இன்று நல்லநாள். இனசனங்கள் மத்தியில் செல்வாக்கு வளரும். குடும்பத்தில் இன்பமான சூழ்நிலைதென்படும்.

தனு: பிரிவின் தாக்குதல் வேதனையைத்தரும், தொழில் துறையிலும் பின்தங்க நேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும்இடம் உண்டு

மகரம்: வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப்படைத் தவர்களின் ஆதரவும் கிடைக்கும். எதிர்பார்த்த விடயமொன்று பலனைத்தரும்.

கும்பம்: மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும். நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள். கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாகஇருக்கும்.

மீனம்: வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும். எடுத்த காரியம் இறுதி நிமிடத்தில் தடைபடும். வெளியிடத்துக் கடிதம் வேதனையைத் தரலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
கு. வேலுப்பிள்ளை

## நேர்ந்தளிக்கும் வைபவம்

(கரவெட்டி]

யாழ். பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா புதிய பேராலயம் இம் மாதம் 30ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நேர்ந்தளிக்கப்படவுள்ளது.

இந்த நேர்ந்தளிக்கும் (அபிஷேகம் வைபவத்தை யாழ். ஆயர். அதி. வந். வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையிலான ஏனைய மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்கள் நிறைவேற்றி வைப்பார்கள்

இதற்கான ஒழுங்குகளை கொஞ்சேஞ்சி மாதா ஆலய பங்குத் தந்தை அருட். திரு. ஜே. பி. ஈ. செல்வராசா அடிகளார், துணைப் பங்குத்தந்தை அருட். திரு. ஞான ஆனந்தன் அடிகளார் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். [க]

## வவனியா "தோணிக்கல்" மாதிரிக்கிராமம் இவ்வாண்டு இறுதிக்குள் பூர்த்தி

### எம். பி. தகவல்

(வவனியா)

"சுயஉதவி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வவனியா தோணிக்கல் என்னுமிடத்தில் 90 வீடுகளும், பொது வசதிகளும் கொண்ட மாதிரிச் கிராமம் இவ்வாண்டின் இறுதிக்குள் உருவாக்கப்படவிருக்கின்றது"

இவ்வாறு வவனியா எம் பி. திரு. தா. சிவசிதம்பரம் ஓமந்தையில் அமைக்கப்பட்ட 10 வீடுகளை திறந்துவைத்து வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு திறப்புக்களை கையளித்த வைபவத்தில் தெரிவித்தார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில்;

1979ம் ஆண்டுசெட்டிகுளம், பூவரசங்குளம், சாஸ்த்திரி கூளாங்குளம், ஓமந்தை, நெடுங்கேணி ஆகிய 5 இடங்களுக்கும் 60 சுயஉதவி வீடுகளைப்பெற்றோம். இன்று ஓமந்தையில் அமைக்கப்பட்ட, 10 வீடுகள் திறந்து கையளிக்கப்படுகின்றன. மற்றைய நான்கு இடங்களிலும் உள்ள 50 வீடுகளும் மிக விரைவில் நிறைவு பெறும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

1980ல் அல்லது 1981ம் ஆண்டு இந்த 60 வீடுகளும் நிறைவுபெற்றிருந்தால் மீண்டும் 60, 70 வீடுகளை சுயஉதவி வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வவனியா மாவட்டம் பெற்றிருக்கும் வீட்டுக் கட்டிட வேலைகளை உரிமையாளர்கள் சுணங்கியதின்காரணமாக இன்னும் கூடுதலான வேலைகளைப் பெறுகின்றவாய்ப்பை நாம் இழந்துவிட்டோம், குறித்த 60 வீடுகளுக்கும் அரசாங்கம் 30 லட்சம் ரூபாவை நீண்டகால வட்டியில்லாக்கடனாக எமக்குத் தந்துள்ளது. வவனியா நகராண்மைக் கழக எல்லைக்குள் கண்டிவீதியிலுள்ள தோணிக்கல் என்னுமிடத்தில் 90 வீடுகளும் பொதுவசதிகளும் கொண்ட மாதிரிக கிராமம் ஒன்றை மாண்புமிகு பிரதம அமைச்சர் எமக்குத தந்துள்ளார். குறித்த மாதிரிக் கிராமம் இவ்வாண்டின் இறுதிக்குள் உருவாக்கப்படவிருக்கின்றது.

இவ்விழாவில் வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி, லோகேஸ்வரன், தேசிய வீடமைப்பு மாவட்ட முகாமையாளர் உட்பட பல அரசாங்க உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்

## கன்னியாஸ்திரிகள் சபைத் தலைவி வருகை

[கரவெட்டி]

கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபைத் தலைவி தாயார் சங். சகோ. காமலிற்று அண்மையில் கரவெட்டி புனித லூர்த்து மாதா கன்னியர் மடத்திற்கு விஜயம் செய்து பார்வையிட்டார்.

இங்கு வந்த தாயாரை புனித லூர்த்து மாதா கன்னியர் மடத்தலைவி அருட் செல்வி தேவநேசம் மற்றும் கன்னியாஸ்திரிகள் வரவேற்று உபசரித்தனர். இதனைத்தொடர்ந்து திருப்பலிப்பூசையும் கன்னியர் மடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. அருட். திரு. நேசநாயகம் அடிகளார் திருப்பலிப் பூசையை நிறைவேற்றி வைத்தார்,

கார்மேல் சபைத் தலைவி தாயார் சங். சகோ.காமலிற்றுவுடன் மாகாணத் தலைவி சங். சகோ.ஜனீசியாவும் கூட வந்து இருந்தார்.

## யோண்பொஸ்கோ புதிய கலையரங்கு திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

புனித யோண் பொஸ்கோ வித்தியாலய புதிய கலையரங்கு திறப்புவிழா இன்று பிற்பகல் 5மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ் ஆயர் பேரருள் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலையரங்கை திறந்து வைப்பார், யாழ் எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் மங்கள விளக்கேற்றிவைப்பார். யாழ். பிரதம கல்வி அதிகாரி ஜனுப் எம். எம். மன்சூர், பங்குத் தந்தை வண பிதா சாள்ஸ் செந்திவேல், யாழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ சிவஞானசுந்தரம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

வித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன,

## சுந்தரர் குருபூசை

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச்சங்கம் ஸ்ரீவரத விக்கினேஸ்வர தேவஸ்தானத்தில் இன்று சுந்தரமூர்த்திநாயனூர் குருபூசையை இன்று கொண்டாடுகிறது.

இன்றுமாலை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி 'மீளா அடிமை' என்ற பொருளில் உரை நிகழ்த்துவார்.

0 0 0

[சுழிபுரம்]

சுழிபுரம் அறுபத்திமூவர் குருபூசை மடத்தில் இன்று சுந்தரமூர்த்திநாயனூர் குருபூசை நடைபெறவுள்ளது. உரையாசிரியர் யோகி கா. கார்த்திகேசுவின் உரையோடுகூடிய புராண படனமும், பூசை வழிபாடும் நடைபெறும். [இ]

## "கழகங்களுக்கிடையே ஒற்றுமை வேண்டும்"

—யோகேஸ்

[யாழ்ப்பாணம்]

"நம்மிடையேயுள்ள கழகங்கள், சபைகள் ஆகியவற்றிடையே ஒற்றுமையும். பரஸ்பர நல்லுணர்வும் நிலவவேண்டும்". இவ்வாறு யாழ் எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் யாழ்.உதயசூரியன் கழக 7வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

திரு.யோகேஸ்வரன் எம்.பி. தொடர்ந்து பேசுகையில் உதயசூரியன் கழக 1-ம் ஆண்டு நிறைவு விழாவிலும், தான் கலந்து கொண்டதை நினைவுபடுத்தியதோடு கழக விழாக்கள் முதலியன திறந்தவெளியரங்கு, மண்டபம் போன்றவற்றில் நடைபெறவேண்டும் என்றும் வீதியோரங்களில் நடாத்தக்கூடாது என்றும் கூறினூர். கழகம் நடாத்திய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி யோகேஸ்வரன் பரிசில்கள் வழங்கினூர்.

இவ்விழாவில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் திரு. எஸ். தியாகராசா, யாழ்.மாவட்ட சபை உறுப்பினர் திரு. அழகையா, திரு. மன்மதராஜன், சட்டமாணவன் செல்வன் கே. ராதாகிருஷ்ணன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். [ப]

# சனத்தொகையைக் கட்டுப்படுத்தாவிடின் நாட்டை எவ்வழியிலும் முன்னேற்ற முடியாது!

## யாழ். மாவட்ட அமைச்சர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

''எமது நாட்டின் சனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்தாது விட்டால் அபிவிருத்தி நடவடிக்கைகளை நாம் எவ்வளவு துரிதப்படுத்தினுலும் அதில் முன்னேற்றம் காண முடியாது. குடும்பத்திட்டத்தை சிறந்த முறையில் செயற்படுத்தினுல் எமது பொருளாதாரம் அபிவிருத்தியடையும் என்பதில் ஐயமில்லை. எமது பொதுநன்மை கருதி நடாத்தப்படும் இதுபோன்ற கருத்தரங்குகள் பெரும்பயனைக் கொடுக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.''

இவ்வாறு சர்வதேச சனத்தொகைச்சேவைப் பணியகத்தின் ஆதரவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற ஆயுர்வேத வைத்திய குடும்பத் திட்டக் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கூன் குறிப்பிட்டார்.

யாழ் மாவட்டத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியர்களுக்கு குடும்பத்திட்ட முறைகளை பயிற்றுவிக்குமுகமாக நடாத்தப்பட்ட இக் கருத்தரங்கில் யாழ். குடாநாட்டின்பல பகுதிகளிலுமிருந்து 50க்கு மேற்பட்ட ஆயுர்வேத வைத்தியர்கள் கலந்துகொண்டனர்.

திரு. விஜயக்கூன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், பொருளாதாரகாரணங்களுக்கு மாத்திரமன்றி தாய்மாரையும், குடும்பசேமநலத் திட்டத்தையும் கருத்திற்கொண்டு குடும்பத்திட்டத்தில் நாம் அதிக கவனம் செலுத்த கடமைப்பட்டிருக்கின்றேம். இத்திட்டம் வெற்றியளிப்பதற்கு ஆயுர்வேத வைத்தியர்கள் தங்கள் பங்களிப்பை செலுத்த வேண்டும் என்று கூறினர்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. சு. நடராசா உரையாற்றுகையில் நாட்டின் சனத்தொகையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் குடும்பத்திட்டத்தை யாழ். மாவட்டத்தில் சிறந்த முறையில் அமுல் நடாத்த யாழ். அபிவிருத்திச்சபை தனது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவதற்கு தயாராக இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

யாழ். லங்காசித்த ஆயுர்வேத கல்லூரியின் சார்பிலும், வடஇலங்கை ஆயுர்வேத வைத்தியர்கள் சம்மேளனத்தின் சார்பிலும் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி நன்றி தெரிவித்து உரையாற்றுகையில், யாழ் மாவட்டத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியர்களை குடும்பத்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் முயற்சிகளுக்கு தமது ஆதரவு என்றும் உண்டென்றும் இதுபோன்ற குடும்பத்திட்ட பயிற்சிக் கிருத்தரங்குகளை யாழ் லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்கும் ஒழுங்குசெய்து நடாத்தினுல் அதிக நன்மைகிடைக்கும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு குடும்பத்திட்ட பணியாளர் அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டனர்.

(பண். நிரு. ஒ)

# இன்று

(யாழ்ப்பாணம்)

சம்பத்திரிசியார் கல்லூரி முத்தமிழ் விழா இன்று மாலை பாரதி நூற்றுண்டுச் சிறப்பு விழாவாக கொண்டாடப்படுகிறது. அருட்திரு. ம. செல்வரெட்ணம் (கரவையூர் செல்வம்) பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறுர். [ப]

★

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பிரதேச மாணவர் ஒன்றியம் கிளிநொச்சி கல்வி வட்டார உயர்தர மாணவர்களுக்கு நடாத்தும் கருத்தரங்கு இன்றும் நாளையும் கிளிநொச்சிமகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சி. வரதராஜனும், நாளைய கருத்தரங்கில் திரு. எஸ். தேவராஜாவும் உரையாற்றுவர். [கெ]

★

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அபிவிருத்தி சபையின் பொதுக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சு. நடராசா தலைமையில் யாழ். செயலக சபாமண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் கொண்டுவரப்படவிருக்கின்றன. [மா]

★

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பதினெட்டாவது முத்தமிழ்விழா இன்றும் நாளையும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# நெஞ்சை உருக்கி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மனிதர்களில் மனிதாபமிக்க, ஏன் 'மனிதத் தெய்வம்' என்று கூடச் சொல்லக்கூடியவகையில் வாழ்ந்து காட்டியவர் என்றுர்.

''கலையுலகத்துக்குப் பேரிழப்பை ஏற்படுத்திவிட்டு அமைதியாக மறைந்துவிட்டார் பெருந்தகை! 94 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சூரியன் இன்று மறைந்துவிட்டான். இனி இந்த இருளை அகற்ற சூரியன் தோன்றுவானு? வாழ்க்கையில் லட்சத்தில் ஒருவர்'' என்று மானிப்பாய் எம். பி. 'தருமர்' புகழ் அஞ்சலி செலுத்தினுர்.

''இனி ஒருவர் இப்படிப் பிறப்பாரா?'' என்ற கேள்வியொன்றினை எழுப்பி எம்மையெல்லாம் கண் கலங்கச் செய்துவிட்டார் விதானையார்' செல்வரத்தினம்.

வடபகுதி கலைமான்களில் ஒருவரென பெருமையோடு சொல்லக்கூடிய 'ஒறேற்றர்' சுப்பிரமணியம் தமக்குத் தெரிந்த 'சொர்ண'ரை எம் கண்முன்நிறுத்தி அஞ்சலியைச் செலுத்தினுர்.

நாடறிந்த சட்டத்தரணி திரு. எஸ். ஆர். கனகநாயகம் 1928 ஆம் ஆண்டு கலையரசு நடித்த 'மனோகரா'வை நினைவுபடுத்தினுர்.

நகைச்சுவையாகவே பேசும் கோப்பாய் 'ஆலால்', நேற்று கலையரசைப் பற்றிப் பேசிக் கண்கலங்கச் செய்துவிட்டார்.

யாழ்ப்பாணம் எம். பி. யோகேசும், கலையரசுவுக்கு கண்ணீர் மல்க, ''ஈழத்தின் நாடக உலகுக்கு ஏற்பட்ட பெரிய இழப்பு'' என்று வர்ணித்தார். மறுமலர்ச்சி செல்வரத்தினம் தமது கவலையை வர்ணிக்கவார்த்தையின்றித் தவித்தார்.

கலையரசு பாசறையில்வளர்ந்தவர்களும், அவரையேகடைசி வரை தங்கள் நாடகத் தெய்வமாகக் கருதியவர்களுமான கலைஞர்கள் எஸ், அமைநாயகமும், ஏ. ரகுநாதனும் கலையரசரின் இழப்பைத் தங்களுக்கு ஏற்பட்ட பெரிய இழப்பாகக் கருதி, நாதளதளக்க அஞ்சலியைச் செலுத்தினுர்கள். 'கலையரசுவின் லட்சியத்தை தொடர்வோம்' என்று அருமையும், கலையரசுவின் பாதையில் செல்வோம்' என்று 'நிர்மலா' ரகுநாதனும் சொல்லி தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

கலைஞர் ஏ. ரி. பொன்னுத்துரையும் தமது இறுதி அஞ்சலியைத் தமக்கே உரிய அமைதியான பாணியில் செலுத்திஞர்.

''கலையரசுவை விட்டுச் சென்ற கடைக்குட்டி நான். அவருக்குப் புகழ்மாலை செலுத்துவதால் மட்டும்பயனில்லை. சிங்களக்கலைஞரான ஜோன் டி சில்வாவுக்கு கொழும்பில் கலையரங்கு அமைத்ததுபோல கலையரசுவுக்கும் அவர் பிறந்த இடமான நவாலியில் ஒரு கலையரங்கமோ, நினைவுச்சின்னமோ அமைக்க எம்மவர்கள் முன்வரவேண்டும். அரசியல்வாதிகள் இதனைச் சிந்தனையில் கொண்டு செயற்பட வேண்டும்'' என்று கடைசியாகப் பேசிய இலங்கை வானெலியைச்சேர்ந்த கலைஞர் கே. எம். வாசகர் எழுப்பிய குரல், பலரது சிந்தனையையும் கிளறியது.

மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் கலையரசுவின் பூதவுடல் நேற்று மாலை தீயுடன் சங்கமமாகியபோதும், வாசகர் விடுத்த உருக்கமான வேண்டுகோள் நெஞ்சங்களையெல்லாம் சிந்திக்க வைத்தது. செயல்பட வேண்டுமென்ற உறுதியையும் பிறக்கச் செய்தது.

## யாழ்ப்பாணத்தில்

# துரையப்பாவுக்கு நேற்று நினைவு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

அமரர் அல்பிரட் துரையப்பாவின் 7-வது நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது.

துரையப்பா ஞாபகார்த்தக் குழுவினர், குழுத் தலைவரும் யாழ். மாநகரசபை முன்னுள் அங்கத்தவருமான திரு. எம். எஸ். பேரின்பநாயகம் தலைமையில், சில ஆலயங்களில் விசேட பூசைகள் நடாத்தியதுடன் கஞ்சிகாய்ச்சி வழங்கினர்.

யாழ். மாநகர விளையாட்டரங்குக்கு (முன்பு துரையப்பா விளையாட்டரங்கு) தெற்குப் புறமாகவுள்ள அமரர் துரையப்பாவின் சமாதிக்கு மலர் வளையம் வைத்தும், யாழ். மாநகரசபை மண்டபத்துக்கு முன்னுல் அமைந்துள்ள துரையப்பாவின் சிலைக்கும் மாலைசூட்டியும், நினைவுக் குழுவினர் அஞ்சலி செலுத்தினர். மாநகர சபைக்கு முன்புறமுள்ள வீதியிலும் கஞ்சி வழங்கப்பட்டது.

# யாழ். நகர் ஹோட்டலில் 2பெண்களுடன் ஒருவர்கைது

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் சந்தேகத்துக்கிடமானமுறையில் இருந்த இரு பெண்களுடன், ஒருவரை யாழ். பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒரு பெண் நுவரெலியாவைச் சேர்ந்தவர், மற்றப் பெண் உடுவிலைச் சேர்ந்தவர். ஆண் உரும்பராயைச் சேர்ந்தவரென்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இம்மூவரும் யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, இவர்களை வைத்திய பரிசோதனைக்குட்படுத்துவதுடன், ஆகஸ்ட் 8-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (மா)

# பதவி நீக்கம்

புவனர்ஸ் அயர்ஸ், ஜூலை. 27

ஆர்ஜென்டீனுவில் நாலு இராணுவ அதிகாரிகள் தற்காலிகமாக பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# இந்திரா அமெரிக்கா சென்றுர்

புதுடில்லி, ஜூன். 27

பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று காலை எயர் இந்தியா விசேட விமானத்தில் புதுடில்லியிலிருந்து அமெரிக்கா பயணமானுர்,

# 600 குடும்பங்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தாக உறுதியளித்துள்ளார்.

இவ்வருடம் முடிவடைவதற்கு முன்பு குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுவதுடன், அடுத்தவருஷம் குடிநீர்ப் பிரச்னை தீர பாரிய திட்டம் ஒன்றை செயல்படுவதற் குத் தாம் தீர்மானித்துள்ளதாகத் திரு. ஆலாலசுந்தரம் தெரிவித்துள்ளார். [மா]

# உருத்திரபுரம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த சார்ஜன்டுகளான திரு, எம். சாந்தகுமார், திரு. இ. திருவிளங்கம் ஆகியோர் சந்தேக நபரை ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி எஸ். கார்த்திகேசு ஆஜரானுர்.

நீதவான் சந்தேக நபரை ஆகஸ்ட்9ம்தேதிவரை றிமாண்டில் வைக்கஉத்தரவிட்டார். [க]

# மரண அறிவித்தல்

## A. P. சின்னத்துரை (ஆசிரியர்)

சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் A. P. சின்னத்துரை காலமானுர். இவர் காலஞ்சென்ற நேசம்மாவின் கணவரும், செல்வரத்தினம், தங்கமலர், காலஞ்சென்ற குணரத்தினம், தேவதாசன், ஞானதீபம், பாலரத்தினம், யோகமலர், அரசரத்தினம், ஜெயரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஷ்பராணி, ஐங்கரம்பிள்ளை, புளோரு, கமலா, அருள்பிரகாசம், காலஞ்சென்ற சாந்தமலர், குலேந்திரராசா, அருள்ஜோதி, புஷ்பறஞ்சினி ஆகியோரின் மாமனுரும், செல்வறஞ்சன், நளாயினி, ஜெயறஞ்சினி, ஜெயந்தினி, தயாளன், ஜீவருஜ், ஞானருஜ், தயாளினி, நேசருஜ், தேவறஞ்சினி, விஜேந்திரன், கிறிஸ்ரி, சாமினி, சத்தியருஜ், நிமாலினி, நிர்மலருஜ், சந்திரருஜ், கிறிஷாந்தினி, கிறிஷாந்தன், அஜேஷன், அஜேஜா, ஜெயநேசன், ஜெபறூபினி ஆகியோரின் அன்புப் பாட்டனுரும், மீராவின் பூட்டனுமாவார்.

அன்னரின் பிரேத சேம ஆராதனை தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி இல்லத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். 4010


## சட்டக்கல்லூரிப் பிரவேசப் பரீட்சை

இப்பரீட்சைக்கான வகுப்புகள் 31-7-82ல் ஆரம்பமாகின்றன.

LL. B , First in Laws வகுப்புகளும் நடைபெறுகின்றன.

JAFFNA LAW ACADEMY

தையல் முத்து மாளிகை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

4011



## தரமான மரத்தளபாடங்களுக்கு

## டில்கா பேணிச்சர் பலெஸ்

234 - 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 8186


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 65-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஜூலை மீ 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.